Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 41
கதிர் : 52

சனிக்கிழமை
17 ஜனவரி 2026

தை 03 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2057

பக்கங்கள் – 12
விலை – ரூபா 50

## நாகபூஷணி ஆலயத்தில் ஜனாதிபதி வழிபாடு!

யாழ்ப்பாணம், ஜன. 17
யாழ்ப்பாணத்துக்குப் பயணம் மேற்கொண்ட ஜனாதிபதி அநுர, நயினாதீவு நாகபூஷணி அம்மன் ஆலயத்தில் நேற்று விசேட வழிபாடுகளில் ஈடுபட்டார்.
இந்த வழிபாடுகளைத் தொடர்ந்து. »11

தி்ஸ்ஸ விகாரைப் பிரச்சினைக்குத் தீர்வு
படைகளிடம் உள்ள காணி விடுவிப்பு
காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரம்

# ஜனாதிபதி 'கப்சிப்' மக்கள் ஏமாற்றம்!



**யாழ்ப்பாணம், ஜனவரி 17**
**ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க யாழ்ப்பாணத்துக்கான தனது பயணத்தின்போது, தமிழர்களின் கோரிக்கைகளான காணி விடுவிப்பு , காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரம், தொடர்பில் எந்தவொரு கருத்தையும் தெரிவிக்காமல் சென்றுள்ளார்.** »11

## கிட்டு ஆவணக் காட்சியகம் நல்லூரில் திறப்பு

விரிவு பக்கம்:- 04

தெற்கின் புனிதத் தலங்களைக் கடந்து

## இனவாதம் பரப்பவே யாழ். வருகின்றனர்!

ஜனாதிபதி அநுர வெளிப்படை

யாழ்ப்பாணம், ஜன. 17
தென்பகுதி மக்கள் அங்குள்ள விகாரைகளைக் கடந்து யாழ்ப்பாணத்தில் உள்ள விகாரைகளுக்கு வருவதன் பின்னணியில் இனவாதமே உள்ளது. அதுபோன்று, விகாரைகளுக்கு முன்னால் இங்கு »11

## பலாலியில் நேற்று அநுர நடைப்பயிற்சி



யாழ்ப்பாணம், ஜன. 17
யாழ்ப்பாணம் பலாலி, பொதுமக்களின் குடியிருப்புகள் உள்ள பகுதிகளில் ஜனாதிபதி அநுர நேற்று நடைபயிற்சியில் ஈடுபட்டார்.
பல்வேறு நிகழ்வுகளில் கலந்துகொள்வதற்காக யாழ்ப்பாணத்துக்கு நேற்றுமுன்தினம் »11

## ஜனாதிபதியின் நிகழ்வுக்கு 75 இ.போ.ச. பேருந்துகள்!

பொதுப் போக்குவரத்து நெருக்கடி
பொதுமக்கள் கடும் அதிருப்தி

யாழ்ப்பாணம், ஜன. 17
ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் நிகழ்வில் கலந்துகொள்வதற்காக, இ.போ.ச.வின் 75 பேருந்துகளில் மக்கள் ஏற்றியிறக்கப்பட்டனர். இதனால் வழக்கமான போக்குவரத்து பெரும் நெருக் »11

ஜனாதிபதியின் நிகழ்வில்

## கட்டாய அடிப்படையில் சேர்க்கப்பட்டது கூட்டம்

யாழ்ப்பாணம், ஜன. 17
ஜனாதிபதி அநுரவின் நேற்றைய நிகழ்வுகளில் கலந்துகொண்ட மக்களில் ஒரு தொகுதியினர், நிவாரணம் மற்றும் இழப்பீடுகளைக் காரணமாகக்கூறி கொண்டு வரப்பட்டனர் என நம்பகரமான முறையில் தெரியவருகின்றது. »11

## தலையில் தேங்காய் வீழ்ந்து குடும்பத்தலைவர் துயரச்சாவு



யாழ்ப்பாணம், ஜன. 17
கொக்கைத் தடியால் தேங்காய் பிடுங்கும் போது, தலையில் தேங்காய் வீழ்ந்ததில் குடும்பத்தலைவர் ஒருவர் பரிதாபமாக உயிரிழந்துள்ளார். »11



## தையிட்டி காணிகளை மக்களிடம் வழங்குக!

ஆரியகுளம் விகாராதிபதி அநுரவிடம் வலியுறுத்து

யாழ்ப்பாணம், ஜன. 17
தையிட்டி திஸ்ஸ விகாரை அமைக்கப்பட்டுள்ள காணிகள் மக்களுடையவை. அவற்றை மக்களுக்கே வழங்க வேண்டும் இவ்வாறு ஆரியகுளம் விகாராதிபதி விமலதர்ம தேரர் ஜனாதிபதி அநுரவிடம் கூறியுள்ளார்.
ஜனாதிபதி அநுர யாழ்ப்பாணம் ஆரியகுளம்விகாரைக்கு நேற்றுப் பயணம் மேற்கொண்டிருந்தார். ஆரியகுளம் விகாராதிபதியுடன் கலந்துரையாடலில் ஈடுபட்ட »11

கிராம அலுவலருடன் மோதல்

## இளங்குமரன் எம்.பி.க்கு நீதிமன்று அழைப்பாணை

கிளிநொச்சி, ஜன. 17
டித்வா புயலின் இடர் முகாமைத்துவப் பணியின் போது, கிராம அலுவலர் ஒருவரைத் தாக்கிய குற்றச்சாட்டுடன் தொடர்புடைய வழக்கில், நாடாளுமன்ற உறுப்பினர் இளங்குமரனை எதிர்வரும் 20ஆம் திகதி முன்னிலையாகுமாறு கிளிநொச்சி நீதவான் நீதிமன்றம் அழைப்பாணை »11

## பேசாலைக் கடலில் மூழ்கிய மூன்றாவது சிறுவனும் பலி



மன்னார், ஜன. 17
மன்னார் பேசாலைக் கடலில் நேற்றுமுன்தினம் நீராடிக் கொண்டிருந்த நான்கு சிறுவர்களில் இருவர் நீரில் மூழ்கி உயிரிழந்திருந்த நிலையில், »11

முச்சந்தி முரளி

"றோட்டில நடக்கிறது முக்கியமில்லை, நடக்கவேண்டியதை செய்யிறதுதான் முக்கியம் கண்டியளோ"

மக்கள் [illegible] தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| கொவிசெத | |
|---|---|
| திகதி | 16.01.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 4318 |
| ஆங்கில எழுத்து | P |
| வெற்றி இலக்கங்கள் | 04 29 40 70 |
| விசேட எழுத்து | P |

| ஹந்தஹண ராசி சுப பலன் | |
|---|---|
| திகதி | 16.01.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1385 |
| வெற்றி இலக்கினம் | மீனம் |
| வெற்றி இலக்கங்கள் | 03 19 22 55 |

| NLB ஜய | |
|---|---|
| திகதி | 16.01.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0344 |
| ஆங்கில எழுத்து | G |
| வெற்றி இலக்கங்கள் | 2 9 2 5 |

| மெகா பவர் | |
|---|---|
| திகதி | 16.01.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2424 |
| ஆங்கில எழுத்து | U |
| சுப்பர் இலக்கம் | 05 |
| வெற்றி இலக்கங்கள் | 05 12 39 59 |

| மஹஜன சம்பத | |
|---|---|
| திகதி | 16.01.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 6076 |
| ஆங்கில எழுத்து | Q |
| வெற்றி இலக்கங்கள் | 8 0 8 7 0 9 |

| தன நிதானய | |
|---|---|
| திகதி | 16.01.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2106 |
| ஆங்கில எழுத்து | L |
| வெற்றி இலக்கங்கள் | 35 40 48 56 |
| விசேட எழுத்து | L |

| சுப தவசக் | |
|---|---|
| திகதி | 16.01.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0192 |
| வெற்றி இலக்கினம் | மீனம் |
| வெற்றி இலக்கங்கள் | 37 40 55 |

# விவசாயம், மீன்பிடியை மீட்டெடுக்க சர்வதேசத்திடம் நிதிக்கோரிக்கை

கொழும்பு, ஜன.17

**டித்வா புயலால் பாதிக்கப்பட்ட விவசாயிகள் மற்றும் மீனவர்களின் வாழ்வாதாரத்தை விரைவாக மீட்டெடுப்பதற்கும், உணவுப் பாதுகாப்பை உறுதி செய்வதற்கும் ஐ.நா. உணவு மற்றும் விவசாய அமைப்பு சர்வதேச சமூகத்திடம் 16.5 மில்லியன் டொலர் நிதியுதவி கோரியுள்ளது.**

டித்வா புயலால் சுமார் 2.2 மில்லியனுக்கும் மேற்பட்ட மக்களின் நாளாந்த வாழ்க்கை மற்றும் வாழ்வாதாரம் என்பன பாதிக்கப்பட்டுள்ளன.

தற்போது சுமார் 1.1 மில்லியனுக்கும் மேற்பட்ட மக்கள் உணவுப் பாதுகாப்பு சார்ந்த உதவிகள், விவசாயம் மற்றும் போசணை உதவிகள் என்பன தேவைப்படும் நிலையில் உள்ளனர். புயலால் ஒரு இலட்சத்து 29 ஆயிரம் ஹெக்ரேயருக்கும் மேற்பட்ட விவசாய நிலங்கள் சேதமடைந்துள்ளன. விவசாயத்தில் ஈடுபட்டுவந்த 2 இலட்சத்து 27 ஆயிரத்துக்கும் மேற்பட்ட குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

விவசாயம் மற்றும் மீன்பிடித் துறைக்கு ஏற்பட்ட இழப்பு 66 முதல் 69 மில்லியன் டொலராக மதிப்பிடப்பட்டுள்ளது என்று ஐக்கிய நாடுகள் சபையின் முகவரமைப்புகளில் ஒன்றான உணவு மற்றும் விவசாய அமைப்பு தெரிவித்துள்ளது.

பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு அவசியமான உடனடி உணவு மற்றும் வாழ்வாதார உதவிகளை வழங்குவதற்கு 16.5 மில்லியன் டொலர் நிதி தேவை எனவும், அதை நன்கொடையாக வழங்க முன்வரவேண்டும் என்றும் ரோமில் உள்ள உணவு மற்றும் விவசாய அமைப்பின் தலைமையகம் சர்வதேச சமூகத்துக்கு அழைப்பு விடுத்துள்ளது. (எ-இ)

| சுபிரி தன சம்பத | | | |
|---|---|---|---|
| திகதி | 16.01.2026 | தினம் | வெள்ளிக்கிழமை |
| வெற்றி வாரம் | 0784 | | |
| ஆங்கில எழுத்து | W | வெற்றி இலக்கம் | 9 3 7 4 1 0 |

| Super Ball DLB | | | |
|---|---|---|---|
| திகதி | 16.01.2026 | தினம் | வெள்ளிக்கிழமை |
| சீட்டிழுப்பு வாரம் | 3050 | ஆங்கில எழுத்து | Y |
| வெற்றி இலக்கம் | 37 38 48 69 | | |

| சனிதா DLB | | | |
|---|---|---|---|
| திகதி | 16.01.2026 | தினம் | வெள்ளிக்கிழமை |
| ஆங்கில எழுத்து | B | வெற்றி இலக்கம் | 09 10 52 56 |
| வெற்றி வாரம் | 5211 | | |

| SASIRI DLB | | | |
|---|---|---|---|
| திகதி | 16.01.2026 | தினம் | வெள்ளிக்கிழமை |
| வெற்றி வாரம் | 0880 | வெற்றி இலக்கம் | 07 16 33 |

| லக்ன ராசி DLB | | | |
|---|---|---|---|
| திகதி | 16.01.2026 | தினம் | வெள்ளிக்கிழமை |
| கும்பம் | | வெற்றி இலக்கம் | 09 44 45 56 |
| சீட்டிழுப்பு வாரம் | 4762 | | |

| KAPRUKA DLB | | | |
|---|---|---|---|
| திகதி | 16.01.2026 | தினம் | வெள்ளிக்கிழமை |
| ஆங்கில எழுத்து | F | சுப்பர் இலக்கம் | 30 |
| வெற்றி இலக்கம் | 30 33 74 75 | வெற்றி வாரம் | 2226 |

| அத கோடிபதி DLB | | | |
|---|---|---|---|
| திகதி | 16.01.2026 | தினம் | வெள்ளிக்கிழமை |
| ஆங்கில எழுத்து | B | வெற்றி இலக்கம் | 05 37 59 70 |
| வெற்றி வாரம் | 2876 | | |

# 95 குற்றவாளிகளுக்கு சிவப்பு அறிவித்தல்!

கொழும்பு,ஜன.17

வெளிநாடுகளில் தலைமறைவாக உள்ள 95 ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவாளிகளுக்கு எதிராக சிவப்பு அறிவித்தல் பெறப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் தெரிவித்துள்ளார்.

2024 ஆம் ஆண்டில் சிவப்பு எச்சரிக்கை மூலம் 10 சந்தேகநபர்களும் 2025 ஆம் ஆண்டில் 11 சந்தேகநபர்களும் இலங்கைக்கு அழைத்துவரப்பட்டனர்.

கடந்த இரண்டு ஆண்டுகளில் நாடு கடத்தல் சட்டத்தின்கீழ் 21 சந்தேகநபர்களை இலங்கைக்குக் கொண்டுவர முடிந்துள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)



# பெரும் பணிகளைச் செய்ய அரசுக்கு முதிர்ச்சி இல்லை!

*சம்பிக்க கூறுகின்றார்*

கொழும்பு. ஜன.17

கல்விச் சீர்திருத்தங்கள் போன்ற பெரும்பணிகளைமுன்னெடுப்பதற்கு தற்போதைய அரசாங்கத்தால் இயலாது. பேருந்து நிலையங்களுக்கு வர்ணம் பூசுதல், சிறிய வீதிகளைப் புனரமைத்தல் போன்றவற்றுக்கே அவர்கள் தகுதியானவர்கள் என்று பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடத்திய ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

கல்விச் சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்துவதை ஒத்திவைக்க ஜனாதிபதி தீர்மானித்துள்ளார். கல்விச் சீர்திருத்தம் ஆசிய அபிவிருத்தி வங்கியுடன் இணைந்து நீண்டகாலமாகத் திட்டமிடப்பட்டது. பிரதமர் ஹரிணி அமரசூரிய அதைத் தேசிய மக்கள் சக்தியின் கொள்கை எனத் தவறாகக் குறிப்பிட்டுள்ளார்.

மக்களின் எதிர்ப்பு மற்றும் மகா சங்கத்தினரின் கடும் எதிர்ப்பு காரணமாகவே ஜனாதிபதி இந்த விடயத்தில் பின்வாங்கியுள்ளாரே தவிர, சரியான புரிதலுடன் இந்தத் தீர்மானம் எடுக்கப்படவில்லை. அரசாங்கம் ஒரு சிறிய கட்சி என்ற கட்டமைப்புக்குள் சிறைப்பட்டுள்ளது - என்றார். (எ-இ)



# சர்வாதிகாரத்தால் முடியாததை அன்பால் சாதித்துக்காட்டுவோம்

*அமைச்சர் சந்திரசேகர் தெரிவிப்பு*

கொழும்பு, ஜன.17

அகங்காரத்தாலும் சர்வாதிகாரத்தாலும் சாதிக்கமுடியாது. அன்பால் சாதிக்க முடியும் என்று நம்புகிறோம். அன்பான தலைவராக அநுர இருக்கின்றார். அன்பான தலைவனின் பணிப்புரையில் எல்லோரும் நாட்டைக் கட்டி எழுப்புவதற்கு முன்வரவேண்டும்.

இவ்வாறு கடற்றொழில் மற்றும் நீரியல்வள அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்துள்ளார். வேலணையில் நேற்று இடம்பெற்ற தைப்பொங்கல் நிகழ்வில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

வேலணைப் பிரதேசத்தில் பெரிய மாற்றம் ஏற்பட்டுள்ளது. சர்வதேச கிரிக்கெட் மைதானம் வரவுள்ளது. குறை கூறுபவர்கள் எதிர்வரும் காலத்தில் இங்கு படையெடுத்து வருவார்கள்.

இங்கு விளையாட்டு மைதானம் வேண்டும் எனக் கூறியவர் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க. டித்வா புயலின் போது யாழ்ப்பாணம் கூடுதலாக பாதிக்காவிட்டாலும் கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. 25 ஆயிரம் ரூபாவை எடுத்துக்கொண்டு யாரும் மாடி வீடுகளைக் கட்டப்போவதில்லை. அந்த பணத்தை வழங்குங்கள் என்று ஜனாதிபதி கூறி நிதி ஒதுக்கீட்டைச் செய்தார். நல்ல ஒரு நாட்டை நல்ல ஒரு தீவகத்தை உருவாக்க நாங்கள் தயார். அகங்காரத்தாலும் சர்வாதிகாரத்தாலும் அதைச் சாதிக்கமுடியாது. அன்பால் சாதிக்கமுடியும் என்று நம்புகிறோம்- என்றார். (எ-26)

# பெண்ணின் உயிரை பறித்த தேங்காய்

கொழும்பு. ஜன.17

பெண்ணின் தலையில் தேங்காய் விழுந்ததில் உயிரிழந்துள்ளார்.

ஹொரணை, பண்டாரவத்தை பகுதியில் இந்தச் சம்பவம் நடந்துள்ளது. அருகிலுள்ள உறவினர் ஒருவரின் வீட்டுக்குச் சென்ற போது இந்த அனர்த்தம் ஏற்பட்டுள்ளது என்று பொலிஸ் விசாரணைகளில் தெரியவந்துள்ளது. (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# வீதி விளக்குக் கட்டணங்களை மக்களிடம் திணிக்கமுடியாது!

*மின்சார ஊழியர் சங்கம் வலியுறுத்து*

**கொழும்பு, ஜன.17**

**அரசாங்கம் வீதி விளக்குகளுக்கான மின் கட்டணத்தை நுகர்வோர் தலையில் சுமத்தத் தீர்மானித்துள்ளது. அதிகாரிகளின் பொறுப்பற்ற நிர்வாகச் சீர்கேடுகளுக்கு நுகர்வோர் ஏன் தண்டப்பணம் செலுத்தவேண்டும்? என்று மின்சார ஊழியர் சங்கச் செயலாளர் ரஞ்சன் ஜயலால் கேள்வி எழுப்பியுள்ளார்.**

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடத்திய ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

மக்கள் வீடுகளில் மின்சாரத்தைச் சிரமத்தின் மத்தியிலேயே பயன்படுத்துகின்றனர். பல வீடுகளில் மின் விளக்குகள் அணைக்கப்பட்டுள்ளன. ஆனால் வீதி விளக்குகள் பகல் நேரத்திலும் ஒளிர்கின்றன. அதிகாரிகளின் பொறுப்பற்ற நிர்வாகச் சீர்கேடுகளுக்கு நுகர்வோர் ஏன் தண்டப் பணம் செலுத்த வேண்டும்?

இந்தப் புதிய கொள்கையால் நுகர்வோர் பெரும் பாதிப்புக்கு உள்ளாவார்கள். அடுத்த காலாண்டில் வீதி விளக்குகளுக்கான மின் கட்டணத்தை பொதுமக்கள் மீது சுமத்தினால், மக்கள் வீதி விளக்குகளை அணைத்துவிட்டு கையில் 'பந்தம்' ஏந்திச் செல்லும் நிலைக்குத் தள்ளப்படுவார்கள். மக்களின் பொருளாதார நிலைமையைக் கருத்திற்கொண்டே தீர்மானங்கள் எடுக்கப்படவேண்டும். அதைவிடுத்து இவ்வாறான சுமைகளைப் பொதுமக்களின் மேல் சுமத்தக்கூடாது - என்றார். (எ-இ)

## சிறையிலுள்ள தேரரிடம் விமல் நலம் விசாரிப்பு!

திருகோணமலை,ஜன.17

திருகோணமலை சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் பலாங்கொடை கஸ்ஸப தேரரைச் சந்தித்து முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்ஸ நலம் விசாரித்துள் ளார்.

கஸ்ஸப தேரர் முன்னெடுத்து வந்த உண்ணாவிரதப் போராட்டத்தை நேற்றுமுன்தினம் மாலை கைவிட்டுள்ளதாக சிறைச்சாலைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தச் சந்தர்ப்பத்தில் நேற்றுத் திருகோணமலை சிறைச்சாலைக்குச் சென்று தேரரைப் பார்வையிட்டுள்ளார். மேலும் அவரைப் பார்ப்பதற்காக சீலரத்தன தேரரும் திருகோணமலை சென்றுள்ளார்.

திருகோணமலை டொக்கியாட் கடற்கரைப் பகுதியில் அனுமதியின்றி சட்டவிரோத கட்டுமானங்களை மேற்கொண்டமை மற்றும் புத்தர் சிலையை வைத்து அமைதியற்ற சூழலை உருவாக்கியமை ஆகிய குற்றச்சாட்டுகளின்கீழ் 9 பேர் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (சு-இ)

## சீரான வானிலை

கொழும்பு,ஜன.17

நாட்டின் பெரும்பாலான பிரதேசங்களில் சீரான வானிலை நிலவும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

வளிமண்டலவியல் திணைக்களம் விடுத்துள்ள வானிலை அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்படுகின்றது.

மேல், சப்ரகமுவ, மத்திய, வடமேல் மற்றும் வடமத்திய மாகாணங்களிலும் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் சில இடங்களில் அதிகாலை வேளையில் பனிமூட்டமான நிலை காணப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)


## இலங்கைக்கு ஐ.எம்.எப். குழு

கொழும்பு,ஜன.17

சர்வதேச நாணயநிதியத்தின் தூதுக்குழுவொன்று இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளதாக அந்த நிதியத்தின் தொடர்பாடல் பணிப்பாளர் ஜூலி கொசாக் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 22 ஆம் திகதி முதல் 28 ஆம் திகதி வரை இந்தத் தூதுக்குழுவின் விஜயம் அமையவுள்ளது.

அண்மையில் ஏற்பட்ட 'டித்வா' புயலினால் ஏற்பட்ட சேதங்களை மதிப்பீடு செய்யவும், விரிவாக்கப்பட்ட நிதி வசதித் திட்டத்தின் கொள்கை விடயங்கள் குறித்து கலந்துரையாடவும் இந்தத் தூதுக்குழு நாட்டுக்கு வருகைதரவுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (சு-இ)



## சட்டவிரோத மணல் அகழ்வில் ஈடுபட்ட 10 வாகனங்கள் ஒரே நாளில் பறிமுதல்

கிளிநொச்சி,ஜன.17

கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதிகளில் சட்டவிரோதமாக மணல் அகழ்வில் ஈடுபட்ட குற்றச்சாட்டில், நேற்றுமுன்தினம் ஒரே நாளில் 5 டிப்பர்கள் மற்றும் 5 உழவு இயந்திரங்கள் கிளிநொச்சிப் பொலிஸாரால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. பன்னங்கண்டி, முரசு மோட்டை, கண்டாவளை, பெரியபரந்தன் ஆகிய பகுதிகளில் குறித்த வாகனங்கள் பறிமுதல் செய்யப்பட்டன.

அனுமதிப் பத்திரத்துக்கு முரணான வகையில் மணல் ஏற்றிய குற்றச்சாட்டில் டிப்பர்கள் மற்றும் உழவியந்திரங்கள் பொலிஸாரால் பறிமுதல் செய்யப்பட்டன. பறிமுதல் செய்யப்பட்ட தடயப்பொருள்கள் கிளிநொச்சி நீதிமன்றில் [illegible]

## மலிவெண்டால் பொலிடோலும்..!

**"பிளாஸ்ரிக்கை ஒழிப்பம், பொலித்தீனை அழிப்பம்" எண்டு ஊர் முழுக்கச் சட்டம் போடுகினம்., லஞ்ச்சீற் பாவிக்கிற கடைக்காரரை துரத்தித் துரத்திப் பிடிக்கினம். வடக்கில ஆளுநர் முதல் உந்த உள்ளூராட்சிசபையள் வரைக்கும் எல்லாரும் "பிளாஸ்ரிக்கை ஒழிப்பம், பொலித்தீனைக் குறைப்பம்" எண்டு ஓயாமல் சொல்லிக்கொண்டே இருக்கினம். "இனிமேல் பொலித்தீன் பை கடையளில ஓசியில கிடைக்காது. அஞ்சு ரூபா காசு குடுத்தால்தான் தருவம்" எண்டு கடைகளில பெரிசா எழுதித் தொங்குது. உதெல்லாம் ஒருவகையில பிளாஸ்ரிக், பொலித்தீனை ஒழிக்கக்கூடிய திட்டங்கள்தான். ஆனால் இப்பிடி நூல் போற பாதையை அடைக்கிறதில காட்டிற அக்கறையை, வால் போற பாதையிலயும் காட்டினால்தான் எங்கட யாழ்ப்பாணச் சூழல் தப்பும்.**

**இப்ப , யாழ்ப்பாணத்தின்ர எந்தச் சந்தியைத் திரும்பிப் பார்த்தாலும் "எது எடுத்தாலும் 150 ரூபாதான்" "மாபெரும் மலிவு விற்பனை" எண்டு பனர் கட்டி ,ஆனை எண்டாலும் நூறு ரூபா எண்ட கணக்கில விக்கிற பிளாஸ்ரிக் கடைகள் கறையான்புத்து மாதிரி கண்டபாட்டுக்கும் முளைக்கத் துடங்கிட்டுது. மலிவெண்டால் பொலிடோலையும் வாங்கிக் குடிக்கிற எங்கட சனம், உந்தப் பிளாஸ்ரிக் மலிவுக் கடையளுக்க முண்டியச்சுக்கொண்டு புகுந்து, "அள்ளித்தா அண்ணை" எண்டு பிளாஸ்ரிக் பாத்திரங்களையும், பொருள்களையும் வாங்கித் தள்ளுகினம். அங்க நிக்கிற கூட்டத்தைப் பார்த்தால் என்னவோ மலிவுவிலையில சீதனம் குடுக்கிற மாதிரி இருக்குது.**

**உந்த 150 ரூபா பிளாஸ்ரிக் பொருள்களின்ர தரத்தைப் பற்றி ஒருத்தரும் வாய் திறக்கிறேலை. மூண்டு நாள் பாவிச்சாலே உக்கிப்போய் உடைஞ்சு விழுகிற பிளாஸ்ரிக் குப்பைக்கூடையையும், வாளியையும் எங்கட சனம் ஆசை ஆசையா வீட்டில கொண்டுபோய்க் குவிக்குது. கடைசியில அதுகளும் ஒரு மாசத்துக்க மண்ணுக்குள்ள போய் எங்கட சூழலைத்தான் நாசமாக்கப்போகுது. லஞ்ச்சீற் பாவிக்கிறவனைப் பிடிச்சுத் தண்டம் அடிக்கத் துடிக்கிற அதிகாரிமார், இப்பிடி ஊர் முழுக்கப் பிளாஸ்ரிக்கைக் கொண்டுவந்து கொட்டுற கடைகளை மட்டும் ஏன் கண்ணில மண்ணைத் தூவின மாதிரிப் பாக்காமலே விட்டிட்டினம்.**

**பிளாஸ்ரிக்கைக் கட்டுப்படுத்திறது எண்டால், அடிமட்டத்தில இருக்கிற சனத்தைப் பிடிச்சுச் சட்டம் பேசுறதை விட்டிட்டு, இப்பிடி ஊர் முழுக்கப் பிளாஸ்ரிக் குப்பையைக் கொண்டுவந்து குவிக்கிற பெரிய பிளாஸ்ரிக் சந்தைகளை முதல்ல கட்டுப்படுத்தோணும். பொலித்தீன் பையை வித்து காசு வாங்கிறதால மட்டும் பிளாஸ்ரிக் ஒழியப்போறதில்லை எண்டதை உரியவை விளங்கினால் சரி கண்டியளோ!**

padsi@uthayan.com - பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சங்கானையில் சட்டவிரோதக் கட்டடம்; இடித்து அகற்ற நீதிமன்றம் உத்தரவு

*மல்லாகம் நீதிவான் அதிரடி!*

யாழ்ப்பாணம், ஜன. 17


சங்கானைப் பகுதியில் சட்டவிரோதமாக அமைக்கப்பட்ட கட்டடம் ஒன்றை உடனடியாக இடித்து அகற்றுமாறு மல்லாகம் நீதிவான் நீதிமன்றம் கட்டளை பிறப்பித்துள்ளது.

சங்கானையில் அனுமதிபெறப்படாது - போக்குவரத்துக்கு இடையூறாக - விதிமுறைகளை மீறி அமைக்கப்பட்ட சட்டவிரோத கடைக்கட்டடத்துக்கு எதிராக வலிகாமம் மேற்குப் பிரதேசசபையால் மல்லாகம் நீதிமன்றில் வழக்குத் தொடரப்பட்டது.

இந்த வழக்கு கடந்த 8ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது குறித்த சட்டவிரோதக் கட்டடத்தை இடித்து அகற்றுமாறு உத்தரவிடப்பட்டுள்ளது. குறித்த கட்டடம் அகற்றப்பட்டமைக்கான அறிக்கையை அடுத்த வழக்குத் தவணையான எதிர்வரும் மார்ச் மாதம் 5ஆம் ஆம் திகதிக்கு முன்னர் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்குமாறு நீதிவான் பணித்துள்ளார்.

அனுமதியின்றித் தன்னிச்சையாகக் கட்டடங்களை எழுப்புவது சட்டப்படி குற்றம் என்பதை இந்தத் தீர்ப்பு உறுதிப்படுத்தியுள்ளது. (ச)

# கிட்டு ஆவணக் காட்சியகம் நல்லூரில் திறப்பு





யாழ்ப்பாணம், ஜன. 17

தியாகதீபம் திலீபன் ஆவணக் காப்பகத்தினால் உருவாக்கப்பட்ட 'கிட்டு ஒரு தனி மனித வரலாறு' எனும் தொனிப்பொருளிலான தளபதி கிட்டுவின் வாழ்வியல் தொடர்பான ஆவணக் காட்சியகம் நேற்று நல்லூரில் திறந்துவைக்கப்பட்டுள்ளது.

போராளிகள் நலன்புரிச் சங்கத்தின் ஏற்பாட்டில் வங்கக் கடலில் காவியமான தளபதி கிட்டு உட்பட 10 மாவீரர்களின் 33 ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு நேற்று வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் நல்லூரிலுள்ள கிட்டுப் பூங்காவில் உணர்வுபூர்வமாகக் கடைப்பிடிக்கப்பட்டது.

இதன்போது கிட்டுவின் உருவப்படத்துக்கு முன்பாக ஈகைச் சுடரேற்றப்பட்டு, மலர்மாலைகள் அணிவிக்கப்பட்டுத் தொடர்ந்து மலர் அஞ்சலி செலுத்தப்பட்டது.

கிட்டுவுடன் வீரகாவியமான ஏனைய மாவீரர்களுக்கும் இதன்போது அஞ்சலி செலுத்தப்பட்டது. தொடர்ந்து தளபதி கிட்டுவின் வாழ்வியல் தொடர்பான ஆவணக் காட்சியகம் திறக்கப்பட்டது. (ச-66)

# நெடுந்தீவு மகா வித்தியாலய அன்னையே....!

தென்றல் தாலாட்ட அசைந்தாடும்
அமுதக் கடல் நடுவே
அழகிய நெடுந்தீவின்
கல்வியோடு பல கலையும்
எம்மவர்க்கு ஊட்டி வளர்த்த
நெடுந்தீவு மகா வித்தியாலய அன்னையே!

அகவை எண்பது காணும் இந்நாளில்
இன்னும் பல நூறாண்டு வாழியவே!
உன் மடிதனில் தவழ்ந்த குழந்தைகளின்
கல்விப்பசி தீர்த்து
கலையனைத்தும் கற்றுயர்ந்து
தேசமெல்லாம் உய்த்துணர்ந்து வாழ
வகை சொல்லும் வித்தகராய்
மடமைகள் போக்கி
இயலாமை எனும் இருளகற்றி
ஆளுமைமிக்க அறிவளித்து
விருட்சமென ஒளி தந்த
அமுத விழா நாயகியே
நீ வாழியவே!

எத்துறையாயினும் மட்டில்லா
உயர் மனிதர்களாய்
சமூகம் போற்றிட வழியமைத்த
நர்த்தக நாயகி நீயம்மா!

நான் என்பது மறந்து
நாமாக கைகோர்த்து
விழுமியப் பண்புதனை
உயர்வாகப் போற்றி
நானிலம் எங்கிலும்
உன்புகழ் சொல்ல வகை செய்த
கல்விக்கூடமே நீ வாழியவே!

இத்தனை உயர்வுபெற
வழிசமைத்த எம் அன்னையின்
பழைய மாணவர்களின் வரவுக்காய்
காத்திருக்கும் பள்ளிச்சிறார்கள்
எக் குறையுமிலாது
வளமனைத்தும் சேர்த்து
மகிழ்வோடு உயர்கல்வி பெற
"மீண்டும் பள்ளிக்கு"
நாமெல்லாம் கைகோர்த்து
பலநூறு உதவிகள் புரிந்தே
கல்வித்தாய் வாழ வழியமைப்போம்
வாழிய நெடுந்தீவு மகா வித்தியாலயமே!

நெடுந்தீவு மகா வித்தியாலயத்தின் அமுத விழாவை ஒட்டி இந்தக் கவிதை பிரசுரமாகின்றது.

**இரா.தர்மரத்தினம்**
ஓய்வுநிலை ஆசிரியர்
பழையமாணவர்

# இன்றைய ராசி உங்களுக்கு எப்படி?

**மேடம்:** உற்சாகமாகச் செயற்படும் நாள். தந்தைவழியில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். சகோதரர்கள் குடும்பம் தொடர்பான விஷயத்தில் உங்களிடம் ஆலோசனை கேட்டு வருவார்கள்.

**இடபம்:** இன்றைக்குப் புதிய முயற்சிகளைத் தவிர்த்துவிடுவது நல்லது. சிலருக்கு நண்பர்கள் மூலம் சில சங்கடங்கள் ஏற்படக்கூடும். தாய்வழி உறவினர்கள்மூலம் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாகமுடியும்.

**மிதுனம்:** தெய்வ அனுகூலம் நிறைந்த நாளாக இருக்கும். மனதுக்கு மகிழ்ச்சிதரும் சம்பவம் நடைபெறும். பிள்ளைகளின் உற்சாகம் உங்களையும் தொற்றிக்கொள்ளும். சகோதரர்கள்மூலம் சில பிரச்சினைகள் ஏற்படக்கூடும்.

**கடகம்:** செலவுகள் அதிகரிக்கும் நாள். என்றாலும் தேவையான பணம் கையில் இருப்பதால் சமாளித்துவிடுவீர்கள். சிலருக்குத் தாய்வழி உறவுகளால் ஆதாயம் உண்டாகும்.

**சிம்மம்:** சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கும் பொருள்சேர்க்கைக்கும் வாய்ப்பு உண்டு. உங்கள் தேவையறிந்து நண்பர் செய்யும் உதவி மகிழ்ச்சி தரும். மற்றவர்களுடன் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

**கன்னி:** பல வகைகளிலும் அனுகூலமான நாள். குடும்பம் தொடர்பான முக்கியமான முடிவு எடுப்பதற்கு உகந்த நாள். ஆனாலும் பெரியவர்களின் ஆலோசனை அவசியம்.

**துலாம்:** உறவினர்கள் வருகையால் திடீர்ச் செலவுகள் ஏற்பட்டாலும் சமாளித்துவிடுவீர்கள். சிலருக்கு வாழ்க்கைத்துணையின் மூலம் பணவரவுக்கு வாய்ப்பு உண்டு.

**விருச்சிகம்:** இன்றைக்கு பதற்றம் தவிர்த்து எதிலும் நிதானமாகச் செயற்படவும். குடும்பத்தில் வீண்சச்சரவுகள் ஏற்படும் என்பதால், பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது.

**தனுசு:** மூன்றாவது நபர்களின் தலையீடு காரணமாக கணவன் - மனைவிக்கிடையே பிரச்சினை ஏற்படக்கூடும் என்பதால் ஒருவரையொருவர் அனுசரித்துச்செல்வது நல்லது.

**மகரம்:** தொடங்கும் காரியங்கள் வெற்றி பெறும். தேவையான பணம் கிடைக்கும். தாய்வழி உறவினர்கள்மூலம் ஆதாயம் கிடைக்கும்.

**கும்பம்:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும் நாள். எதிர்பார்த்த பணம் கைக்குவரும். தாயிடம் கேட்ட உதவி கிடைக்கும்.

**மீனம்:** மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். புதிய முடிவுகளைத் துணிந்து எடுப்பீர்கள். குடும்பத்தினர் உங்கள் யோசனைக்கு முக்கியத்துவம் தருவார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

உண்மை - நேர்மை - அஞ்சாமை


# ஐ.நா. 61...!

'நீதியை நிலைநாட்டுவோம்' என்ற முழக்கத்துடன் ஆட்சிபீடம் ஏறிய ஜனாதிபதி அநுர தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசாங்கம், போர்க்குற்றவாளிகளைத் தண்டிப்பதற்கும், பொறுப்புக்கூறலை நிறைவேற்றுவதற்கும் காத்திரமான முயற்சிகளை மேற்கொள்ளவில்லை என்று கண்டித்திருக்கின்றது ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் கண்காணிப்பகம். உள்ளகப் பொறிமுறையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி வழங்குவதை இலங்கை அரசாங்கங்கள் தொடர்ச்சியாகத் தவிர்த்துவருகின்றன. ஆதலால், போர்க்குற்றவாளிகள் தண்டிக்கப்படும் வரை அல்லது பொறுப்புக்கூறல் நிறைவேற்றப்படும் வரை, இலங்கை மீதான பிடியை உலக நாடுகள் மென்மேலும் இறுக்க வேண்டும் என்றும் அந்த அமைப்பு அழைப்பு விடுத்திருக்கின்றது.

போர்க்குற்ற விசாரணைகள் தொடர்பில், இதற்கு முன்னர் ஆட்சியில் இருந்த அரசாங்கங்களுக்கும், தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்துக்கும் இடையில் எந்தவொரு வேறுபாடும் இல்லை. 'இலங்கையில் போர்க்குற்றம் இடம்பெறவில்லை. ஆதலால், 'போர்க் குற்றம்' என்ற சொற்பதத்தைப் பயன்படுத்தி இந்த விவகாரத்தை எதிர்கொள்வது தவறு' என்று வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் முன்பு வெளிப்படுத்திய கருத்துகள் மூலம், அநுர அரசு 'பசுத் தோல் போர்த்திய புலி' என்பது அன்றே பட்டவர்த்தனமாகியிருந்தது. இத்தகையதொரு பின்னணியில், பொறுப்புக்கூறலை வலியுறுத்தியிருக்கும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் கண்காணிப்பக அறிக்கையைத் தமிழர்கள் பெரிதும் வரவேற்கின்றனர்.

ஆனால், இலங்கை அரசாங்கத்தின் கைகளில் போர்க்குற்றப் பொறுப்புக்கூறலை நிறைவேற்றும் கடப்பாடு இன்னமும் ஏன் ஒப்படைக்கப்படுகின்றது என்ற தெளிவை சர்வதேச சமூகம் ஏற்படுத்திக் கொள்வதும் இப்போது அவசியமானது. ஸ்ரீலங்கா அரசாங்கங்கள் அவற்றின் பொறுப்புக்கூறல் கடமையில் இருந்து தொடர்ச்சியாகத் தவறியதாலும், பலவீனமாகச் செயற்பட்டமையாலுமே ஈழத்தமிழர்கள் சர்வதேசப் பொறிமுறையைக் கோரும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். இவ்வாறிருக்கையில், மீண்டும் மீண்டும் இலங்கை அரசாங்கத்தின் பக்கமாகப் பந்தைத் தள்ளிவிடுவது அடிப்படையற்ற செயற்பாடு.

பயங்கரவாதத் தடைச்சட்ட நீக்கம், புதிய அரசியலமைப்பு உருவாக்கம், வெளிவிவகாரக் கொள்கைகளில் மாற்றம், அணிசேரா நாடுகளை அரவணைக்கும் போக்கு எனத் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் அண்மைக்காலமாகப் புதியதொரு பாதையில் பயணிக்க எத்தனித்தது. அவை பயனுள்ள பாதைகளாக அமைந்தால் பரவாயில்லை. மாறாகத் தப்பிக்கும் மார்க்கமாக அமைந்துவிடக்கூடாது. எனவே, மறுமலர்ச்சியொன்று உருவாவதாக அநுர தரப்பினர் காண்பித்துவந்த நிலையில், சர்வதேச அரங்கில் இதுவரைகாலமும் மேற்கொள்ளப்பட்டுவந்த குறைந்தபட்ச நடைமுறைகள்கூட நீர்த்துப்போய் விடுமோ என்ற அச்சம் ஈழத்தமிழர் மனங்களில் இருக்கவே செய்தது. இவ்வாறான பின்புலத்தில் வெளியாகியுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் கண்காணிப்பக அறிக்கை, ஈழத்தமிழர்களுக்கு ஓர் ஆறுதல் பெருமூச்சே.

அதேவேளை, சர்வதேசத்தின் இறுக்கமான பிடிக்குள் இருந்து திமிறி வெளிக்கிளம்பிப் புறப்படுவதற்கு இலங்கை காலாகாலமாக முயன்று கொண்டிருப்பதும் பட்டவர்த்தனமானதே. எனவே, ஐக்கியநாடுகள் மனித உரிமைகள் பேரவையின் எதிர்வரும் 61ஆவது அமர்வையாவது, இலங்கைக்கு கனதியான அழுத்தம் வழங்கும் காத்திரமான தளமாக சர்வதேசம் பயன்படுத்தவேண்டும். அதுவே ஈழத்தமிழர்களின் எதிர்பார்ப்புமாகும்.


செய்தி : 021 493 0000 விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com விளம்பரம் : advt@uthayan.com






## பொய்யாமொழி

நெடுங்கடலும் தன்நீர்மை குன்றும் தடிந்தெழிலி
தான்நல்கா தாகி விடின்

**பொருள்:** ஆவியான கடல்நீர் மேகமாகி அந்தக் கடலில் மழையாகப் பெய்தால்தான் கடல்கூட வற்றாமல் இருக்கும். மனித சமுதாயத்திலிருந்து புகழுடன் உயர்ந்தவர்களும் அந்தச் சமுதாயத்திற்கே பயன்பட்டால்தான் அந்தச் சமுதாயம் வாழும்.




கடந்தாண்டில்

# இறைவரித் திணைக்களம் ஈட்டியது 2,244 பில்லியன்

**கொழும்பு, ஜன.17**

**2025ஆம் ஆண்டு 2,202 பில்லியன் ரூபா வருமான இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருந்த நிலையில் உள்நாட்டு இறைவரித் திணைக்களம் 2,244 பில்லியன் ரூபா வருமானத்தை ஈட்டியுள்ளதாக உள்நாட்டு இறைவரித் திணைக்களம் தெரிவித்துள்ளது.**

இது இலக்கைவிட 42 பில்லியன் ரூபா அதிகம் எனவும் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் வரலாற்றில் ஈட்டப்பட்ட மிக உயர்ந்த வருடாந்த வருமானம் எனவும் அதன் ஆணையாளர் நாயகம் நந்தன குமார சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்துடன் 2026ஆம் ஆண்டுக்காக உள்நாட்டு இறைவரித் திணைக்களத்துக்கு 2,402 பில்லியன் ரூபா வருமான இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இந்த இலக்கை அடைவதற்காக இலங்கை சுங்கத் திணைக்களத்துடன் இணைந்து செயற்படத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ச-இ)

Inland Revenue Department - Sri Lanka

## பால் தேநீர் விலை குறைப்பு

கொழும்பு.ஜன.17

ஜனவரி 16ஆம் திகதி முதல் நடைமுறைக்குவரும் வகையில் ஒரு கப் பால் தேநீரின் விலை 10 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளதாக அகில இலங்கை சிற்றுண்டிச்சாலை உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது. பால்மாவின் விலை குறைக்கப்பட்டதால் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. 400 கிராம் பால்மாவின் விலை 50 ரூபாவாலும் ஒரு கிலோ கிராம் பால்மாவின் விலை 125 ரூபாவாலும் குறைக்கப்பட்டுள்ளது. இதனால் ஒரு கப் பால் தேநீரின் விலை 10 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)



## பொல்லால் தாக்கப்பட்டு குடும்பஸ்தர் கொலை!

கண்டி.ஜன.17

பொல்லால் தாக்கப்பட்டு குடும்பஸ்தர் ஒருவர் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் கண்டி, நாவலப்பிட்டி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கொன்தென்னாவ பிரதேசத்தில் நடந்துள்ளது.

கொலை செய்யப்பட்டவருக்கும் 34 வயதுடைய சந்தேக நபருக்கும் இடையில் ஏற்பட்ட தனிப்பட்ட தகராறு காரணமாக இந்தத் தாக்குதல் இடம்பெற்றுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ச)

## பாதாள உலகக்குழுவின் குற்றவாளிகள் நாட்டுக்கு

கொழும்பு.ஜன.17

டுபாயில் வைத்து அண்மையில் கைதுசெய்யப்பட்ட பல கொலைச்சம்பவங்களுடன் தொடர்புடைய பாதாள உலகக் குழுவின் முக்கியமான உறுப்பினர்கள் நேற்றுமுன்தினம் இலங்கைக்கு அழைத்து வரப்பட்டுள்ளனர்.

அவர்களுடன் சேர்த்துக் கைதுசெய்யப்பட்ட பெண் ஒருவரும் நாட்டுக்கு அழைத்து வரப்பட்டுள்ளார். (ச-இ)



## ஒன்லைனில் 'லைசென்ஸ்'

கொழும்பு.ஜன.17

எதிர்வரும் ஏப்ரல் தமிழ், சிங்களப் புத்தாண்டுக்கு முன்னர் 25 மாவட்டங்களிலும் ஓட்டுநர் உரிமங்களை ஒன்லைனில் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என மோட்டார் போக்குவரத்து ஆணையர் நாயகம் கமல் அமரசிங்க தெரிவித்துள்ளார். இந்தச் சேவை தற்போது 11 மாவட்டங்களில் ஒன்லைனில் செயற்பட்டு வருகிறது. மீதமுள்ள மாவட்டங்களில் ஓட்டுநர் உரிமங்களை ஒன்லைனில் வழங்குவதற்கான பணிகள் தற்போது நடைபெற்று வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ச-இ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





யாழ்.போதனா மருத்துவமனையில் தைப்பொங்கல் நிகழ்வு மருத்துவமனைப் பணிப்பாளர் மருத்துவக் கலாநிதி. த.சத்தியமூர்த்தி தலைமையில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்றது. (ச-41-66)

## கைப்பந்து பயிற்சி தொடக்க விழா

கிளிநொச்சி, ஜன.17

உரிமம் பெற்ற கைப்பந்து பயிற்சிப் பாடநெறியின் தொடக்கவிழா கிளிநொச்சி உட்புற விளையாட்டு அரங்கத்தில் இன்று சனிக்கிழமை காலை 8மணிக்கு இடம்பெறவுள்ளது.

யாழ்.மாவட்ட கைப்பந்துச் சங்கத் தலைவர் வி.செந்தூரன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் பிரதம விருந்தினராக கிளிநொச்சி மாவட்ட விளையாட்டு அலுவலர் எம்.ஆர். மோகனதாஸ், சிறப்பு விருந்தினராக கிளிநொச்சி மத்திய கல்லூரி அதிபர் எஸ்.பூலோகராஜா, ஒருங்கிணைப்பாளராக வடமாகாணத்திற்கான கைப்பந்துப் பயிற்சியாளரும் தொழில்நுட்ப ஒருங்கிணைப்பாளருமான ரி.கருணாகரன் ஆகியோர் கலந்துகொள்வர். (ச-41)

## விருது விழா

கிளிநொச்சி, ஜன.17

உரிமம் பெற்ற கைப்பந்து பயிற்சிப் பாடநெறியின் விருதுவிழா கிளிநொச்சி உட்புற விளையாட்டு அரங்கத்தில் நாளைமறுதினம் திங்கட்கிழமை பி.ப. 2மணிக்கு இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக கிளிநொச்சி மாவட்டச் செயலர் எஸ்.முரளிதரன், சிறப்பு விருந்தினராக யாழ். மாவட்டச் செயலக கைப்பந்து விளையாட்டுப் பயிற்சியாளர் எஸ். சதீஸ்குமார், ஒருங்கிணைப்பாளராக வடமாகாணத்துக்கான கைப்பந்துப் பயிற்சியாளரும் தொழில்நுட்ப ஒருங்கிணைப்பாளருமான ரி.கருணாகரன் ஆகியோர் கலந்துகொள்வர். (ச-41)

## கட்டுப்பாட்டு விலையைமீறி அரிசி விற்பனை தண்டம் ரூ.ஒரு இலட்சம்



கொழும்பு, ஜன.17

**கட்டுப்பாட்டு விலையைவிட அதிக விலைக்கு அரிசி விற்பனை செய்த மூன்று வர்த்தகர்களுக்கு நீதிமன்றம் தலா ஒரு இலட்சம் ரூபா அபராதம் விதித்துள்ளது.**

ஜாஎல மற்றும் கந்தானை பகுதிகளைச் சேர்ந்த வர்த்தகர்களுக்கு எதிராக நுகர்வோர் விவகார அதிகாரசபையினால் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளில் வர்த்தகர்கள் தமது குற்றத்தை ஒப்புக்கொண்டதையடுத்து மூவருக்கும் மூன்று இலட்சம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

குறித்த வர்த்தகர்கள் ஒரு கிலோ அரிசியை 308, 275 மற்றும் 280 ரூபா ஆகிய விலைகளில் விற்பனை செய்துள்ளனர் என்று நுகர்வோர் விவகார அதிகாரசபை நீதிமன்றத் தில் சுட்டிக்காட்டியுள்ளது.

அரசாங்கம் நிர்ணயித்த கட்டுப்பாட்டு விலையை மீறி நுகர்வோரை ஏமாற்றும் வகையில் செயற்பட்டமைக்காக இந்தச் சட்டநடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ச)



## இயற்கை வளங்களை ஆக்கிரமிக்காதீர்கள்!

*சிம்சன் குரூஸ் அடிகளார் தெரிவிப்பு*

மன்னார்,ஜன.17

ஐம்பூதங்களான நிலம், நீர், காற்று, தீ, ஆகாயம் இவற்றால் தான் நாம் உயிர் வாழ்ந்து கொண்டு இருக்கின்றோம். இவற்றையெல்லாம் மனிதன் இன்று அழித்து ஆக்கிரமித்துக் கொள்கின்றான் என்று பேசாலை உதவிப் பங்குத் தந்தை அருட்பணி அன்ரன் செசாரியோ சிம்சன் குரூஸ் அடிகளார் தெரிவித்துள்ளார்.

பேசாலை புனித வெற்றி அன்னை ஆலயத்தில் நடைபெற்ற தைப்பொங்கல் விழாவில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தைப்பொங்கல் பண்டிகை, இந்துக்களுக்கு மட்டுமானதல்ல. இது தமிழர்களுக்கானது. எனவே ஒவ்வொரு மனிதனும் இறைவனுக்கு நன்றி சொல்லும் நல் உள்ளங்களாக இருக்க வேண்டும். இதனைத்தான் பொங்கல் விழா எமக்கு நினைவூட்டுகின்றது - என்றார். (க-60)



இலங்கைத் தமிழரசுக்கட்சியின் வவுனியாக் கிளையின் கலாசாரப் பொங்கல் விழா, கட்சியின் வவுனியா அலுவலகமான தாயகத்தில் நேற்று இடம்பெற்றது. நாடாளுமன்ற உறுப்பினர் ப.சத்தியலிங்கம் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் கட்சியின் முக்கியஸ்தர்கள், உள்ளூராட்சி மன்றங்களின் தவிசாளர்கள்,உப தவிசாளர்கள் , உறுப்பினர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். (க-110)

## அமலமரித் தியாகிகள் சபை முதல்வராக பச்சேக் தெரிவு



மன்னார்,ஜன.17

வடக்கு மாகாண அமலமரித் தியாகிகளின் சபையின் முதல்வராக அருட்பணி எஸ். ஜெயந்தன் பச்சேக் அடிகளார் மீண்டும் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

மன்னார் பேசாலையைச் சேர்ந்த இவர், தனது ஆரம்பக் கல்வியை பேசாலை புனித மேரிஸ் பாடசாலையிலும், உயர்தர வகுப்பு வரை பேசாலை சென்.பற்றிமா மகா வித்தியாலயத்திலும் தொடர்ந்துள்ளார். 2000ஆம் ஆண்டு அருட்பணியாளராக திருநிலைப்படுத்தப்பட்டார். 2023 ஆம் ஆண்டு வட மாகாண அமலமரித் தியாகிகளின் சபையின் ஒன்பதாவது முதல்வராக நியமிக்கப்பட்டிருந்தார். சபையின் மூன்று வருட கால பொறுப்பு நிறைவுற்றதுடன், நடப்பாண்டுக்கான முதல்வராக மீண்டும் இரண்டாவது முறையாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளார். (க-60)



பளை வேம்பொடுகேணி சீ.சீ.த.க. பாடசாலைக்கு சில்வர் ஸ்பீச் ஸ்ராண்ட் அன்பளிப்பாக நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை வழங்கப்பட்டது. புலம்பெயர் நாட்டில் வதியும் பாடசாலையின் பழைய மாணவர் நடராசா சிவசீலன் தனது சகோதரன் நினைவாக இதனைக் கையளித்தார். (ச-41-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

அன்னை மடியில்

08 . 05 . 1957



ஆண்டவன் அடியில்

15 . 01 . 2026

## ஸ்ரீமான் அப்புத்துரை இராஜேந்திரம்

யாழ்ப்பாணம் கீரிமலை பொயிட்டியை பிறப்பிடமாகவும் வவுனியா நெளுக்குளத்தை நிரந்தர வதிவிடமாகவும் கொண்ட அப்புத்துரை இராஜேந்திரம் அவர்கள் கடந்த 15.01.2026 வியாழக்கிழமை வவுனியாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அப்புத்துரை - சின்னத்தங்கம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற செல்வராசா - முத்துலட்சுமி தம்பதியரின் அன்பு மருமகனும், விஜயலட்சுமி (ஓய்வுநிலை ஆசிரியை) அவர்களின் பாசமிகு கணவரும், பிரதாஜினி, அனோஜன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், கண்ணதாசன், திவ்வியா ஆகியோரின் பாசமிகு மாமனாரும், தஸ்விக் (கனடா), அபிமன் (கனடா) ஆகியோரின் பாசம் நிறைந்த பேரனும், தெய்வேந்திரம், மல்லிகாதேவி, நிர்மலாதேவி, கேதீஸ்வரன், தர்மேந்திரம் ஆகியோரின் சகோதரரும், செல்வமலர், ரோகினிதேவி, றஞ்சிதமலர், இந்திராணி, ஜெயநந்தினி, நகுலேஸ்வரன், லோகேஸ்வரன், பிரியதர்சினி ஆகியோரின் மைத்துனரும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் 18.01.2026 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் நெளுக்குளம் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

(CS 60472) E

தொடர்புகளுக்கு
**077 424 4531**

தகவல்:
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 09 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 18 . 11 . 1947



மறைவு 14 . 01 . 2017

அமரர்

**வைத்திய கலாநிதி Dr. குமாரசாமி மகேசன்**

(முன்னாள் யாழ் போதனா வைத்தியசாலை வைத்திய நிபுணர், தேசிய போக்குவரத்து வைத்திய நிறுவனத்தின் பொறுப்பதிகாரி - யாழ்ப்பாணம்)

ஐயா நீங்கள் எல்லோரையும் விட்டு
பிரிந்து நாட்கள், வாரங்கள் ஆனது
வாரங்கள் மாதங்கள் ஆயின மாதங்கள்
வருடமாய் ஒன்பது ஆயிற்று என்றும்
உங்கள் நினைவுகள் என்றும்

நண்பர்கள்

(CS 60469) E

## மரண அறிவித்தல்

பிறப்பு 12 . 05 . 1977



இறப்பு 15 . 01 . 2026

**யோகராசா பாலகுமார்**

(பிரதி அதிபர், கொ/ விபுலானந்தா கல்லூரி - கொழும்பு - 09)

சந்நிதி வீதி, இடைக்காடு - அச்சுவேலியை பிறப்பிடமாகவும், கொழும்பு கொட்டாஞ்சேனையை வசிப்பிடமாகவும் கொண்ட யோகராசா பாலகுமார் அவர்கள் நேற்றுமுன்தினம் (15.01.2026) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் யோகராசா (ஓய்வுபெற்ற கணக்காளர்) - சத்தியேஸ்வரி தம்பதியரின் பாசமிகு மகனும், காலஞ்சென்ற தம்பிஐயா - கலாவதி தம்பதியரின் பாசமிகு மருமகனும், திருமகள் (ஆசிரியை - கள/ புனித அன்னம்மாள் மகளிர் மகா வித்தியாலயம் - வத்தளை) அவர்களின் அன்புக் கணவரும், அக்ஷயாவின் (கொ/சைவ மங்கையர் கழகம்) பாசமான தந்தையும், பாலகணேஸ் (அப்பு - கனடா), பாலசதிஸ் (முரளி - கனடா) ஆகியோரின் பாசமிகு சகோதரரும், ஞானேஸ்வரி, யோகேஸ்வரி (கனடா), கனகசபை ஆகியோரின் பெறாமகனும், செல்வாஈஸ்வரன் (கனடா), நடராசா அன்னம்பிள்ளை, கந்தையா பொன்னம்மா ஆகியோரின் மருமகனும், சங்கீதா (கனடா), தமிழேந்தி (கொ/புனித அந்தோனி தமிழ் ம.வித்தியாலயம் - கொழும்பு - 14), றமேஸ் (சுவிஸ்), சுரேஸ் (சுவிஸ்) ஆகியோரின் மைத்துனரும், கண்ணன் (கொழும்பு) சகலனும், வசந்தினி (சுவிஸ்), தர்சினி (சுவிஸ்)ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (18.01.2026) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக இடைக்காடு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்: குடும்பத்தினர்
கண்ணன் - 070 755 8275,
பிரதாபன் - 077 521 2736

(CS/60467) J-1

# குறுகிய வட்ட முடிவுகளால் கல்வி மறுசீரமைப்பு தோல்வி

*முஜிபுர் ரஹ்மான் எம்.பி. தெரிவிப்பு*

2023ஆம் ஆண்டு ஆரம்பித்திருக்க வேண்டிய கல்வி மறுசீரமைப்பை நடைமுறைப்படுத்துவதில் கடந்தகால மற்றும் தற்போதைய அரசாங்கங்கள் தோல்வியடைந்துள்ளன என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

கல்விச் சீர்திருத்தங்கள் ஊடாக பாடத்திட்ட மறுசீரமைப்பு மேற்கொள்ளப்பட வேண்டியது அவசியமானது. உலகளாவிய தொழில்நுட்ப மாற்றங்களுக்கு ஏற்ப ஒவ்வொரு எட்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை இவ்வாறான மாற்றங்கள் செய்யப்பட வேண்டும்.

கல்விச் சீர்திருத்தங்கள் தொடர்பாக வெள்ளை அறிக்கை ஒன்றைச் சமர்ப்பிக்க வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ மற்றும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கோரியபோதும், அரசாங்கம் அதற்குச் செவிசாய்க்கவில்லை. வெளிப்படைத்தன்மையற்ற முறையில் தமக்கு நெருக்கமான அரசியல் தரப்பினரை மட்டும் இணைத்துக்கொண்டு இந்த் திட்டத்தைச் செயற் படுத்த அரசாங்கம் முயன்றது. கல்வித்துறையில் நீண்டகால அனுபவமுள்ள நிபுணர்களைப்புறக்கணித்து, ஒரு குறுகிய அரசியல் வட்டத்துக்குள் நின்று எடுக்கப்பட்ட முடிவுகளேதற்போதைய தோல்விக்குக் காரணம் - என்றார். (எ-இ)

**மாபிள் வேலை**

உங்கள் வீடுகளுக்கு தரமான முறையில் அழகாக மாபிள் பதித்து தரப்படும்.
ஒரு சதுர அடி - 85 ரூபாய்.
நிலம் இழுத்து பதிக்க - 110 ரூபாய்

(CS/60478) J-1

**077 334 1281**

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை**
**உயர் பட்டப்படிப்புகள் பீடம்**
**புதிய அனுமதிகள்**

**பண்பாட்டியலில் முதுமாணி**
**(Master of Cultural Studies) - (அணி VI)**

மேற்படி சுயநிதிக் கற்கைநெறிக்கான விண்ணப்பங்கள் தகுதியானவர்களிடமிருந்து கோரப்படுகின்றன. விண்ணப்பப்படிவம் மற்றும் மேலதிக விபரங்களை உயர்பட்டப்படிப்புகள் பீடத்தின் வலைத்தளத்தில் (www.grad.jfn.ac.lk) பார்வையிடலாம்.

விண்ணப்ப முடிவுத்திகதி : 17/02/2026
மேலதிக தொடர்புகளுக்கு : 0212223608

பதிவாளர்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

## 16ஆம் ஆண்டு நினைவு தினம்



**சண்முகலிங்கம்**
**லதுர்ஜிகாந் (லது)**
(வதனி ஜுவல்லரி, கொடிகாமம்)

திதி : சதுர்த்தசி

மண்ணில் 16.08.1976 விண்ணில் 14.01.2010

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து

வானுறையும் தெய்வத்தின் நிழலில்

சங்கமமாகி விட்டவரே !

உமைப் பிரிந்து நாம்

பதினாறு ஆண்டுகள் கடந்து

உளம் வருத்தும் வேளையில்

மீளாத்துயர் போக்க மீண்டும்

வருவாயோ எம் உயிரே !

பொற்றொழிலாளர் வீதி,
சங்கத்தானை,
சாவகச்சேரி.

குடும்பத்தினர்

(CS/60466) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமூக ஊடக நிதி மோசடியில் சிக்காது விழிப்பாயிருங்கள்!

## இலங்கைப் பொலிஸார் அறிவுரை

**கொழும்பு, ஜன.17**

**இணையம் மற்றும் சமூக ஊடகங்களைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் நிதிமோசடிகள் தொடர்பில் அவதானமாக இருக்கவேண்டும் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. ரெலிகிராம், வட்ஸ்அப் மற்றும் பிற சமூக ஊடகங்கள் ஊடாக மேற்கொள்ளப்படும் மோசடிகள் தொடர்பாக அதிக முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என்று பொலிஸ் ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

பொதுமக்களை ஏமாற்றி வங்கிக் கணக்கு இலக்கங்கள், பயநர் பெயர் மற்றும் கடவுச்சொல், கியூஆர் குறியீடுகள் போன்ற இரகசியத் தகவல்களைப் பெற்று, நிகழ்நிலையில் வேலைவாய்ப்பு வழங்குவதாக பண மோசடிகள் இடம்பெறுகின்றமை கண்டறியப்பட்டுள்ளது.

சமூக ஊடகங்களைப் பயன்படுத்தும் போது, அவதானமாகச் செயற்படவேண்டும், விழிப்புடன் இருக்கவேண்டும். பயன்படுத்தும் சமூக ஊடகக் கணக்குகளை வேலைவாய்ப்புகள் தருவதாகக் கூறும் அறிமுகமில்லாத நபர்கள், அறிமுகமற்ற குழுக்களுக்கு வழங்கவேண்டாம். அறிமுகமில்லாத நபர்களுக்கு இணைய வழியினூடாக பணம் செலுத்துதல், வங்கி விபரங்களைப் பகிர்தல், தனிப்பட்ட கணக்குகளைப் பிறருக்குப் பயன்படுத்த அனுமதியளித்தல் போன்றவற்றைத் தவிர்க்கவேண்டும். அறிமுகமில்லாத நபர்கள் வழங்கும் தொலைபேசிச் செயலிகளை நிறுவும்போது, இணைய இணைப்புகளைப் பயன்படுத்தும் போது பாதுகாப்பு நடவடிக்கைகள் தொடர்பாகக் கவனம் செலுத்த வேண்டும் என்று பொலிஸ் ஊடகப் பிரிவின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)



# ஜனாதிபதியின் ஆணவ முடிவு நாட்டுக்கு நீதியை வழங்காது!

*நாமல் ராஜபக்ச கூறுகின்றார்*

கொழும்பு, ஜன.17

ஜனாதிபதி ஆணவத்தால் எடுக்கும் முடிவுகள் தேசத்துக்கோ, அதன் மக்களுக்கோ அல்லது ஜனாதிபதிக்கோ நீதியை வழங்குவதில்லை என்று நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

மக்கள் விடுதலை முன்னணிக்கு ஏற்ற கல்விச் சீர்திருத்தங்கள் நாட்டுக்கும் ஏற்றவை என்று ஜனாதிபதி நம்பினால் அது தவறு. முன்மொழியப்பட்ட கல்விச் சீர்திருத்தங்கள் நாட்டுக்குப் பொருத்தமானவை அல்ல என்பதை ஜனாதிபதியின் உரை காட்டுகிறது. ஆனால் அரசாங்கம் அவற்றைச் செயற்படுத்தத் தயாராக உள்ளது. நாட்டுக்குப் பொருத்தமானதும் அவசியமானதுமானவற்றை மட்டுமே செயற்படுத்தவேண்டியதன் அவசியத்தை ஜனாதிபதி புரிந்துகொள்ளவேண்டும். அறிமுகப்படுத்தப்படும் எந்தவொரு சீர்திருத்தமும் நாட்டுக்கு இசைவானதாக இருக்கவேண்டும், மக்கள் விடுதலை முன்னணிக்கு ஏற்றவாறு வடிவமைக்கப்படக்கூடாது-என்றார். (எ-இ)

# மகா சங்கத்தினர் அவமதிப்பு; அமைச்சரே மன்னிப்புக் கோருக!

## ஐ.ம.சக்தி தெரிவிப்பு

கொழும்பு,ஜன.17

மகா சங்கத்தினரை அவமதிக்கும்வகையில் கருத்து வெளியிட்ட அமைச்சர் கே.டி. லால்காந்த உடனடியாக மன்னிப்புக் கோரவேண்டும் என்று பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி வலியுறுத்தியுள்ளது.

இதுதொடர்பில் ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவிக்கையில், மிகிந்தலை தலைமை விகாராதிபதிமீது தரக்குறைவான வார்த்தைப் பிரயோகத்தை மேற்கொண்டு அமைச்சர் லால்காந்த விமர்சித்துள்ளார்.

கல்வி மறுசீரமைப்புத் தொடர்பில் கருத்து வெளியிடும் சுதந்திரம் மிகிந்தலை தேரருக்கு இருக்கின்றது. எனினும், குற்றச்சாட்டுகளைத் தாங்கிக்கொள்ளமுடியாமல், மகா சங்கத்தினரை விமர்சிப்பது ஏற்புடையதல்ல. இதனை வன்மையாகக் கண்டிக்கின்றோம். தான் வெளியிட்ட கருத்தை அமைச்சர் மீளப்பெறவேண்டும். மிகிந்தலை தேரர் உட்பட மகாசங்கத்தினரிடம் அமைச்சர் லால்காந்த மன்னிப்புக்கோரவேண்டும் - என்றார். (ச-44)

# தொல்பொருள் திணைக்களம் மீது பொதுக்கணக்குக் குழு அதிருப்தி

கொழும்பு, ஜன.17

தொல்பொருள் திணைக்களத்தால் அடையாளம் காணப்பட்ட மொத்த தொல்பொருள் இடங்களில் 48 சதவீதத்தை வர்த்தமானியில் வெளியிடத் தவறியமை தொடர்பில் பொதுக்கணக்குக்குழு அதிருப்தி தெரிவித்துள்ளது.

வர்த்தமானியில் வெளியிடப்பட்ட மற்றும் வெளியிடப்படாத அனைத்துத் தரவுகள் தொடர்பாகவும் ஒரு மாதத்துக்குள் அறிக்கை சமர்ப்பிக்கவேண்டும் என்றும் 'கோபா' குழு பரிந்துரைத்துள்ளது.

2021, 2022 மற்றும் 2023ஆம் ஆண்டுகளுக்கான தணிக்கையாளர் நாயகத்தின் அறிக்கைகள் மற்றும் தொல்பொருள் துறையின் தற்போதைய செயற்றிறனை ஆய்வுசெய்வதற்காக நாடாளுமன்ற உறுப்பினர் கபீர் ஹாஷிம் தலைமையிலான பொதுக்கணக்குக் குழு கடந்த 6ஆம் திகதி நாடாளுமன்றத்தில் கூடியபோது இந்த விடயங்கள் விவாதிக்கப்பட்டுள்ளன.

தொல்லியல் துறையின் அதிகாரபூர்வ இணையத்தளம் புதுப்பிக்கப்படவில்லை என்றும், சுற்றுலாப் பயணிகளை ஈர்ப்பதில் தொல்லியல் துறையின் அதிகாரபூர்வ இணையத்தளத்தைப் புதுப்பிப்பது மிகவும் முக்கியமானது என்றும் குழுவின் உறுப்பினர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (எ-இ)

# தனது தோல்விகளுக்கான பழியை அதிகாரிகள்மீது சுமத்துகிறது அரசு

*சரித ஹேரத் குற்றச்சாட்டு*

கொழும்பு, ஜன.17

அரசாங்கம் தனது தோல்விகளுக்கான பழியை அரச அதிகாரிகள்மீது சுமத்தும் கலாசாரத்தை ஆரம்பித்துள்ளது. அமைச்சர்கள் தமது பொறுப்புகளில் இருந்து நழுவிச்செல்வதால், செயலாளர்கள் மற்றும் தலைவர்கள் தீர்மானங்கள் எடுக்கப்படுகின்றன என ஐக்கிய மக்கள் சக்தியின் தொகுதி அமைப்பாளர் பேராசிரியர் சரித ஹேரத் குற்றஞ்சாட்டியுள்ளார்.

இதுதொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது-

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் ஆட்சியைக் கைப்பற்றி ஓராண்டுக்கும் மேலாகியுள்ள நிலையில், நாட்டின் தற்போதைய நிலைமை குறித்து நகர்ப்புற மற்றும் கிராமப்புற மக்களுக்குப்போதிய அனுபவம் கிடைத்துள்ளது. சுமார் 40 இலட்சம் மக்கள் வறுமையினால் பாதிக்கப்பட்டு, பொருளாதார ரீதியாக நெருக்கடியை எதிர்நோக்கியுள்ளனர்.

அரச முதலீடு கள் வீழ்ச்சியடைந்துள்ளதால் சமூகத்தின் ஒரு பிரிவினரிடையே பணப்புழக்கம் முற்றாக ஸ்தம்பித்துள்ளது. விவசாயிகள் உரம் மற்றும் விதைகளைப் பெற்றுக்கொள்ளக் கடன் சங்கங்களை நாடவேண்டியுள்ள அதேவேளை, நகர்ப்புற மக்கள் கடன் அட்டைகளின் உதவியுடன் வாழ்கின்றனர். இதுவே நாட்டின் இன்றைய யதார்த்தமாகும். கணக்காய்வாளர் நாயகம் பதவிக்குத் தகுதியான ஒருவரை உடனடியாக நியமிக்கவேண்டும் என்றும், அதிகாரிகளைப் பலிக்கடாவாக்காமல் அவர்களைப் பாதுகாக்கும் அரசமைப்புக்கு உட்பட்ட கலாசாரத்தை உருவாக்கவேண்டும் என்றும் ஐக்கிய மக்கள் சக்தி அரசாங்கத்தை வலியுறுத்துகின்றது-என்றார். (எ-இ)

# சுற்றுலாத்துறை இலக்குகளை அடைய புதிய திட்டங்கள்

கொழும்பு, ஜன.17

இலங்கையின் சுற்றுலாத் துறையை மேம்படுத்துவதற்கும், இந்த ஆண்டுக்கான சுற்றுலா இலக்குகளை அடைவதற்கும் விசேட வேலைத்திட்டமொன்றை சுற்றுலா அபிவிருத்திச்சபை ஆரம்பித்துள்ளது.

நாட்டுக்கு சுற்றுலாப் பயணிகளின் வரவு குறைவாகக் காணப்படும் காலப்பகுதிகளில், அதிகளவான பயணிகளை ஈர்ப்பதே இந்தத் திட்டத்தின் முக்கியமான நோக்கம் என்று சுற்றுலா அபிவிருத்திச் சபையின் தலைவர் புத்திக ஹேவாவசம் தெரிவித்தார்.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

கோடைகால விடுமுறையை முன்னிட்டு ஸ்பெயின் உள்ளிட்ட ஐரோப்பிய நாடுகளிலிருந்து அதிகளவான சுற்றுலாப் பயணிகள் வருகின்றனர்.

அந்தப் பிராந்தியங்களை மையப்படுத்தி விசேட ஊக்குவிப்புத் திட்டங்களை முன்னெடுக்க எதிர்பார்த்துள்ளோம்.

சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் திட்டத்தின் முதற்கட்டமாக இந்தியாவில் விசேட பரப்புரைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. புதுடெல்லி, மும்பை மற்றும் சென்னை ஆகிய நகரங்களை இலக்குவைத்து இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

2026 ஆம் ஆண்டின் ஆரம்பம் சுற்றுலாத்துறைக்குச் சாதகமாக அமைந்துள்ளது. ஜனவரி மாதத்தின் முதல் வாரத்தில் மட்டும் 94 ஆயிரத்துக்கும் அதிகமான சுற்றுலாப் பயணிகள் இலங்கை வந்துள்ளனர் - என்றார். (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தயார்ப்படுத்தல் எதுவுமின்றியே கல்விச் சீர்திருத்தம் நடைமுறை

## இலங்கை ஆசிரியர் சங்கம் தெரிவிப்பு

கொழும்பு, ஜன.17

கல்வி மறுசீரமைப்பு எந்தவிதத் தயார்ப்படுத்தலும் இன்றி நடைமுறைப்படுத்தப்படவிருந்தது. தரம் 6க்கான பாடத்தொகுப்பு 3 மாதங்களுக்கே தயாரிக்கப்பட்டிருந்தது. அரசாங்கம் இதை ஒத்திவைக்காதிருந்தால் மாணவர்கள் பிரச்சினைகளை எதிர்கொண்டிருப்பார்கள் என்று இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடத்தப்பட்ட ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது அரசாங்கம் 6ஆம் தரத்துக்கான புதிய கல்வி மறுசீரமைப்பை ஒத்திவைத்துள்ளது. அதை வரவேற்கின்றோம். மறுசீரமைப்பை ஒத்திவைக்காது செயற்படுத்தியிருக்கலாம் என்று சிலர் கூறுகின்றனர். அவ்வாறு செய்யமுடியாது. தரம் ஒன்று மற்றும் தரம் 6 மாணவர் களுக்கான பாடத்தொகுப்பு முதலாம் தவணைக்கு மட்டுமே தயாரிக்கப்பட்டிருந்தது. இரண்டாம், மூன்றாம் தவணைக்கான பாடத்தொகுப்புகள் தயாரிக்கப்படவில்லை, அச்சிடப்படவுமில்லை. இந்தப் பாடத் தொகுப்பை கொண்டு செல்வதற்கு ஆசிரியர்களைப் பயிற்றுவித்திருப்பதும் 3 மாதங்களுக்காகும். முதலாம் தவணைக்குப் பின்னர் அடுத்தகட்ட நடவடிக்கை தொடர்பான எந்த வேலைத்திட்டமும் இல்லை.

அடுத்த வருடம் இந்த மறுசீரமைப்பு நடவடிக்கையை மேற்கொள்வதாக இருந்தால், தற்போதே அது தொடர்பான ஆரம்பகட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும்- என்றார். (எ-இ)

## விபத்தில் சிக்கி பிக்கு உயிரிழப்பு

கொழும்பு,ஜன.17

அவிசாவளை - இரத்தினபுரி பிரதான வீதியில் விபத்தில் பிக்கு ஒருவர் உயிரிழந்துள்ளார் என்று எஹெலிய கொடை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அவிசாவளையிலிருந்து எஹெலியகொடை நோக்கிப் பயணித்த பேருந்து பிக்கு மீது மோதியதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

பேருந்துச் சாரதி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளதுடன் விபத்துத் தொடர்பான விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ச)

## மரண அறிவித்தல்



பிறப்பு
05 ✦ 06 ✦ 1983

இறப்பு
15 ✦ 01 ✦ 2026

**அமரர் திருமதி தேவரஞ்சினி செல்லக்குமார்** (ராசாத்தி – தேவா)

(ஆசிரியை, குமுழமுனை றோமன் கத்தோலிக்க மகா வித்தியாலயம்)

சங்கக் கடை வீதி, நாவற்குழி மத்தியைப் பிறப்பிடமாகவும் குமுழமுனை முள்ளியவளையை வதிவிடமாகவும் கொண்ட திருமதி தேவரஞ்சினி அவர்கள் (15.01.2026) வியாழக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் வேல்முருகன் பாக்கியம் அவர்களின் அன்பு மகளும், கோதண்டபாணி பாக்கியம் அவர்களின் அன்பு மருமகளும், செல்லக்குமாரின் பாசமிகு மனைவியும், ஜினுஷாளினியின் பாசமிகு தாயாரும், ஜீவநந்தினி, நகுலேஸ்வரன், ஜெகதீஸ்வரன், தேவரஞ்சன் ஆகியோரின் பாசமிகு சகோதரியும், லதா, அஜந்தா ஆகியோரின் அன்பு மைத்துனியும், தஷ்விகனின் அன்பு அத்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் எதிர்வரும் 18.01.2026 ஞாயிற்றுக்கிழமை குமுழமுனை முள்ளியவளையில் உள்ள அவரது இல்லத்தில் முற்பகல் 10 மணியளவில் ஈமக்கிரியைகள் இடம்பெற்று, பூதவுடல் தனகக்கிரியைகளுக்காக குமுழமுனை தாமரைக்கேணி இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நாவற்குழி மத்தி,
நாவற்குழி

தகவல்
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



தோற்றம்
01 . 10 . 1954

மறைவு
15 . 01 . 2026

**திருமதி ஜெயந்தி சண்முகலிங்கம்**
**(நடன ஆசிரியை)**

யாழ். அரியாலையை பிறப்பிடமாகவும், கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட ஜெயந்தி சண்முகலிங்கம் அவர்கள் கடந்த 15.01.2026 வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சதாசிவம் (சாண்டோ மாஸ்ரர்) - நாகம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் இலட்சுமிப்பிள்ளை தம்பதியரின் மருமகளும், சண்முகலிங்கம் அவர்களின் அன்பு மனைவியும், அபிராமி, ரஜீவ்கரன், வரகுணன் ஆகியோரின் அன்புத் தாயாரும், நளாயினி, நிர்திகா ஆகியோரின் மாமியாரும், குகவரதராசா இந்திராணி ரதிதேவி, பவாணி, நந்தகுமார், சிவகுமார் ஆகியோரின் அன்புச் சகோதரியும், அர்ஜுன், இமயா, ரோர்வி, ரியன் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கனடா நேரப்படி நடைபெறும்.

Funeral service : January 17, 2026 at 5.00 pm - 9.00 pm
Ceremony & Cremation : January 18, 2026 at 8.00 am - 11.00 pm
Brampton crematorium & Visitation centre
30 Bramwin Ct, Brampton, ON L6T 5G2

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு தயவுடன் கேட்டு கொள்கிறோம்.

305, A.V. வீதி,
அரியாலை.

தகவல்: குடும்பத்தினர்.
021 [illegible] 1038

(CR 461025) A

## மரண அறிவித்தல்



தோற்றம்
11 . 05 . 1932

மறைவு
15 . 01 . 2026

**சதாசிவம் தர்மலிங்கம் (பரஞ்சோதி)**
(இளைப்பாறிய கணக்காளர், பெருந்தெருக்கள் திணைக்களம் - PWD)

வட்டு கிழக்கு, தாவளையைப் பிறப்பிடமாகவும், சித்தன்கேணியை வசிப்பிடமாகவும் கொண்ட சதாசிவம் தர்மலிங்கம் (பரஞ்சோதி) அவர்கள் கடந்த 15.01.2026 வியாழக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சதாசிவம் - தனலட்சுமி அம்மா தம்பதியரின் அன்புப் புதல்வரும், காலஞ்சென்ற இராமையா - அன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், கமலாவின் ஆருயிர்க் கணவரும், சுதாகரன், சதாசெல்வி, சத்தியசெல்வி ஆகியோரின் பாசமிகு தந்தையும், கஜனியின் மாமாவும், நிர்மலா, சிதம்பரநாதன், ரவீந்திரகுமார், மோகன் ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்றவர்களான Dr.பசுபதிராசா, சிவசோதிராசா, கனகமணி மற்றும் கமலாம்பிகை, ஜெயலட்சுமி, செல்வராசா, வசந்தா ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற பரம்சோதி அவர்களின் அன்பு மைத்துனரும், சரண்யா, சுபாசினி, ஐஸ்வரி, ஸ்கந்தன், சய்தன்யா, மயூறிக்கா, அருணசிவா ஆகியோரின் பாசமிகு பேரனாரும், லோகநாதன், ஆருஷி ஆகியோரின் அன்புப் பூட்டனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (18.01.2026) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக வழுக்கையாறு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

கமலபதி, மாதர் சங்க வீதி,
சித்தன்கேணி.

தகவல்:
குடும்பத்தினர்.

(CR 469141) A

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜனாதிபதி...

பொங்கல் பண்டிகைக் கொண்டாட்டம், போதைக்கு எதிரான செயற்றிட்டம் மற்றும் பொதுமக்களுக்கான உதவித் திட்டங்களில் கலந்துகொள்வதற்காக ஜனாதிபதி யாழ்ப்பாணம் வந்திருந்தார். நேற்றுமுன்தினமும், நேற்றும் இந்த நிகழ்வுகள் நடைபெற்றன. எனினும், பல்வேறு சந்தர்ப்பங்களில் ஜனாதிபதி உரையாற்றிய போதிலும், தமிழர்களின் நீண்டகாலக் கோரிக்கைகள் தொடர்பில் எந்தவொரு கருத்தையும் வெளிப்படுத்தாமல் சென்றுள்ளார்.

இறுதியாக ஜனாதிபதி யாழ்ப்பாணத்துக்குப் பயணம் மேற்கொண்டிருந்த போது, காணாமல் ஆக்கப்பட்டோர் விடயத்தில் தனது அரசாங்கம் தீர்வு வழங்கும் என்று கூறியிருந்தார். 'காணாமல் ஆக்கப்படுதல் மூலம் ஓர் உறவை இழப்பதன் வலி என்னவென்று எனக்குத் தெரியும். ஆதலால் இந்த விடயத்தில் தீர்வை வழங்குவதற்கு அனைத்து முயற்சிகளும் எடுப்பேன்' என்ற அவரது கூற்று தமிழ் மக்கள் மத்தியில் நம்பிக்கை ஏற்படுத்தியிருந்தது.

ஆதலால் ஜனாதிபதி இம்முறை முக்கியமான அறிவிப்புக்களை வெளியிடுவார் என்ற எதிர்பார்ப்பு மக்கள் மத்தியில் நிலவியது. எனினும், இந்த விடயங்கள் தொடர்பில் ஜனாதிபதி எதுவும் குறிப்பிடாததால் மக்கள் ஏமாற்றம் அடைந்துள்ளனர்.

முன்னைய ஜனாதிபதிகள் யாழ்ப்பாணத்துக்கு வரும்போது எவ்வாறு செயற்படுவார்களோ அவ்வாறே ஜனாதிபதி அநுரவின் பயணம் அமைந்திருந்ததாக மக்கள் அதிருப்தி வெளியிட்டுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ-ம-26)

## இனவாதம்...

இடம்பெறும் போராட்டங்களும் இனவாத நோக்கில் அமைந்தவையே இவ்வாறு ஜனாதிபதி அநுர தெரிவித்துள்ளார்.

போதைப்பொருள் ஒழிப்புத் தொடர்பான தேசிய வேலைத்திட்டம் ஜனாதிபதி அநுரவின் பங்கேற்புடன் கொக்குவில் தொழில்நுட்பக் கல்லூரியில் நேற்று ஆரம்பமானது.

நிகழ்வில் ஜனாதிபதி அநுர மேலும் தெரிவித்ததாவது:-

இந்த நாட்டில் பல தசாப்தங்களாக யுத்தம் நீடித்தது. பல தசாப்தங்களாக சந்தேகம் எங்களை ஆட்கொண்டது. எங்களுக்கு மிஞ்சியது உயிரிழப்புகள்தான். வடக்கிலும் தெற்கிலும் பிள்ளைகள் கொல்லப்பட்டனர். பலர் காணாமல் ஆக்கப்பட்டனர். இந்த நிலைமை இனியும் வேண்டாம். இனவாத முறுகல் நிலைக்குச் செல்லாத நாடுதான் எமக்குத் தேவை. ஆதலால் சகோதரத்துவத்தையும், சமாதானத்தையும் கட்டியெழுப்புவதில் நாங்கள் அக்கறையுடன் செயற்படுவோம். எந்தவொரு இடத்திலும், இனவாதத்துக்கு மீண்டும் இடமில்லை. ஆனால் சில இடங்களில் இனவாத சம்பவங்கள் நடைபெறுகின்றமையை நான் அறிவேன். புனிதத் தலமொன்றை அடிப்படையாகக் கொண்ட முறுகல் நீடித்து வருகின்றது. இது தவறு.

போயா தினத்தன்று சிறிமாபோதி புனிதத் தலத்தைக் கடந்து யாழ்ப்பாணத்தில் உள்ள விகாரைக்கு வருகின்றனர். தென் பகுதியில் உள்ள விகாரைகளைக் கடந்து யாழ்ப்பாணத்துக்கு வருவதன் நோக்கம் என்ன? அந்த இடத்தில்கூட பகையும் இனவாதமும்தான் காணப்படுகின்றது. அதுபோல் விகாரைக்கு முன்பாக இடம்பெறும் போராட்டங்களும் காணிக்காக அல்லாமல் இனவாதத்துக்காகவே முன்னெடுக்கப்படுகின்றன. போராடும் நபர்களில் எத்தனை பேருக்குக் காணிகள் உள்ளன என ஆராயுமாறு நான் புலனாய்வுத் துறைக்குச் சொல்லியுள்ளேன்.

சிறிய இடங்களாக இருந்தாலும், பெரிய இடங்களாக இருந்தாலும் இனவாதத்துக்கு இடமில்லை. ஏனெனில் மோதல்களும் முறுகல் நிலையும் உள்ள நாடு எமக்குத் தேவையில்லை. அன்பான சகிப்புத்தன்மையுள்ள நாடுதான் எமக்குத் தேவை. இதற்காக நாங்கள் பல திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகின்றோம் - என்றார். (அ-ம-26)

## ஜனாதிபதியின்...

கடியை எதிர்கொண்டது.

போதைப்பொருள் ஒழிப்புத் தொடர்பான தேசிய வேலைத்திட்டம் ஜனாதிபதி அநுரவின் பங்கேற்புடன் கொக்குவில் தொழில்நுட்பக் கல்லூரியில் நேற்று ஆரம்பமானது. இந்த நிகழ்வுக்காகவே, 75 இ.போ.ச. பேருந்துகளில் மக்கள் ஏற்றிபிறக்கப்பட்டனர்.

ஜனாதிபதியின் நிகழ்வுக்காக பேருந்துகள் சென்றதால், யாழ்ப்பாணம் மாவட்டத்தில் இ.போ.ச. பேருந்துச் சேவை மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே இடம்பெற்றது என்றும், இதனால் பல்வேறு நெருக்கடியை எதிர்கொண்டதாகவும் மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இது தொடர்பில் இ.போ.ச. திணைக்களத்தைத் தொடர்புகொண்டபோது தெரிவித்ததாவது:-

ஜனாதிபதியின் நிகழ்வுக்காக யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தால் எம்மிடம் பேருந்துகள் கேட்கப்பட்டன. அவற்றை உரிய நடைமுறைகளுக்கு அமைவாக நாங்கள் வழங்கினோம். எனினும் போக்குவரத்தில் நெருக்கடிகள் ஏற்பட்டதாகக் கூறிக்கொள்ள முடியாது. ஏனெனில் உரிய திட்டமிடல்களை நாங்கள் மேற்கொண்டிருந்தோம் - என்றனர்.

கடந்த அரசாங்கங்கள் மக்களை அழைத்து வருவதற்காக இ.போ.ச. பேருந்துகளைப் பயன்படுத்தியமைக்கு தேசிய மக்கள் சக்தியினர் கடும் அதிருப்தியை வெளியிட்டிருந்தனர். இவ்வாறிருக்கையில், அவர்களின் ஆட்சியில் அத்தகைய செயற்பாடு இடம்பெற்றுள்ளமை பெரும் விசனங்களை ஏற்படுத்தியுள்ளது. (அ-ம-26)

## இளங்குமரன்...

அனுப்பியுள்ளது.

டித்வா புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக பரந்தன் இந்து மகா வித்தியாலயத்தின் இடைத்தங்கல் முகாமொன்று அமைக்கப்பட்டிருந்தது. இதன்போது அங்கு தங்கியிருந்த மக்களுக்குச் சுகாதாரப் பரிசோதகரின் அனுமதியின்றி உணவு வழங்க முற்பட்ட இளங்குமரனை, கிராம அலுவலர் தடுத்ததாகவும், இதையடுத்து, அவர் மீது நாடாளுமன்ற உறுப்பினர் இளங்குமரன் தாக்குதல் நடத்தியதாகவும் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டது.

இந்த முறைப்பாடு தொடர்பான வழக்கு பதில் நீதவான் எஸ்.சிவபாலசுப்பிரமணியம் முன்னிலையில் நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டது. கிராம அலுவலர் சார்பாக ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் ஆஜராகியிருந்தார்.

எனினும், நாடாளுமன்ற உறுப்பினர் இளங்குமரன் நேற்று நீதிமன்றத்தில் முன்னிலையாகவில்லை. அவர் சார்பில் ஆஜரான சட்டத்தரணி, 'இளங்குமரன் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார். இன்று நிகழ்வொன்றில் கலந்துகொள்வதால் அவரால் நீதிமன்றுக்குச் சமுகமளிக்க இயலவில்லை' என்று மன்றில் தெரிவித்தார்.

இதன்போது கிராம அலுவலர் சார்பாக முன்னிலையான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்ட ஒருவர் நீதிமன்றத் தவணையின்போது நேரில் முன்னிலையாக வேண்டியது கட்டாயமாகும். அவ்வாறு முன்னிலையாகாமல் சட்டத்தரணியை மட்டும் அனுப்புவது நீதிமன்றத்தை அவமதிக்கும் செயல் என்று சுட்டிக்காட்டினார்.

இருதரப்பு வாதங்களையும் பரிசீலித்த நீதவான் வழக்கை எதிர்வரும் 20ஆம் திகதிக்கு ஒத்தி வைத்ததுடன், அன்றைய தினம் நாடாளுமன்ற உறுப்பினர் இளங்குமரனை நீதிமன்றத்தில் முன்னிலையாகுமாறு உத்தரவிட்டார். (அ-ம-66-26-113)

## கட்டாய...

கொக்குவில் தொழில்நுட்பக் கல்லூரியில் தேசிய போதைப்பொருள் கட்டுப்பாட்டுச் செயற்றிட்டம் ஜனாதிபதி அநுரவின் தலைமையில் நடைபெற்றது. நிகழ்வில் ஆயிரக்கணக்கான மக்கள் கலந்து கொண்டனர். அவர்களில் ஒரு தொகுதியினரே, டித்வா புயல் இழப்பீடு மற்றும் நிவாரணங்களைக் காரணமாகக் கூறி அழைத்து வரப்பட்டுள்ளனர். அத்துடன் பாதுகாப்புக்குழு மற்றும் சிவில் குழுக்கள் மூலமும் கட்டாய அடிப்படையில் ஆட்கள் திரட்டப்பட்டுள்ளனர் என்றும் தெரியவருகின்றது. கடந்த அரசாங்கங்களும் இவ்வாறான காரணங்களைக்கூறி மக்களை அழைத்து வருவதை வழக்கமாக வைத்திருந்தன. ஜனாதிபதி அநுரவின் நிகழ்விலும் அத்தகை செயற்பாடு இடம்பெற்றுள்ளமை பல்வேறு விமர்சனங்களை ஏற்படுத்தியுள்ளது. (அ-ம-26)

## பலாலியில்...

வந்திருந்த ஜனாதிபதி அநுர, பலாலியில் உயர் பாதுகாப்புக்கு மத்தியில் தங்கியிருந்தார். இதன் தொடர்ச்சியாகவே பலாலி அன்ரனிபுரம் பகுதியில் நேற்று அவர் நடைபயிற்சியில் ஈடுபட்டார்.

ஜனாதிபதியுடன் பொதுமக்கள் உரையாடியதுடன், ஒளிப்படங்களையும் எடுத்துக் கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம-26)

## நாகபூஷனி...

நயினாதீவு நாகதீப விகாரைக்கும் ஜனாதிபதி அநுர சென்றிருந்தார். இதன் போது, நயினாதீவு விகாராதிபதி நவதகல பதுமகீர்த்தி தேரருடன் ஜனாதிபதி விசேட கலந்துரையாடலில் ஈடுபட்டார். தையிட்டி திஸ்ஸ விகாரைக் காணிகளை மக்களிடம் ஒப்படைக்க வேண்டிய அவசியம் தொடர்பில் நயினாதீவு விகாராதிபதி ஜனாதிபதியின் கவனத்துக்குக் கொண்டு சென்றார் என்று தெரியவருகின்றது.

'திஸ்ஸ விகாரைக்காக ஆக்கிரமிக்கப்பட்ட காணிகள் தொடர்பில் தீர்மானிக்கும் அதிகாரம் என்னிடமே உள்ளது. எனினும் ஜனாதிபதி உள்ளிட்ட முக்கியஸ்தர்கள் என்னை இதுவரை சந்திக்கவில்லை' என்று நயினாதீவு விகாராதிபதி அண்மையில் தெரிவித்திருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ-ம-26)

## தையிட்டி...

போதே மக்களின் காணிகளை விடுவிக்க வேண்டியதன் அவசியத்தை விகாராதிபதி விமலதர்ம தேரர் வலியுறுத்தியுள்ளார்.

மக்களின் காணிகள் மக்களிடமே வழங்கப்பட வேண்டும். தையிட்டியில் போராட்டத்தில் ஈடுபடும் மக்களின் கோரிக்கை நியாயமானது. எனவே, அந்தக் காணிகளை அரசாங்கம் உடனடியாக மக்களுக்கு வழங்க வேண்டும். தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் அதற்குரிய நடவடிக்கைகளை அதி விரைவாக மேற்கொள்ள வேண்டும் என்று யாழ்ப்பாணம் ஆரியகுளம் விகாராதிபதி விமலதர்ம தேரர் மேலும் கூறியுள்ளார். (அ-ம-26)

## பேசாலை...

காணாமற்போன சிறுவன் நேற்றுச் சடலமாக மீட்கப்பட்டான்.

வசந்தபுரத்தைச் சேர்ந்த சத்தியசீலன் டேவிற் சாமுவேல் (வயது -17), பேசாலையைச் சேர்ந்த றொபேட் பஸ்ரியன் சிரோக்சன் (வயது - 16) உதயபுரத்தைச் சேர்ந்த கிருஸ்ணானந்தா ரூபன் (வயது -16) ஆகிய சிறுவர்களே இவ்வாறு சடலங்களாக மீட்கப்பட்டுள்ளனர். பிறிதொரு சிறுவன் நேற்றுமுன்தினம் மீட்கப்பட்டு மருத்துவமனையில் சிகிச்சைபெற்று வருகின்றான் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம-56-60)

## தலையில்...

யாழ்ப்பாணம் கோப்பாய் பகுதியைச் சேர்ந்த தம்புராசா ஜெயசந்திரன் (வயது- 60) என்ற குடும்பத் தலைவரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது:-

குறித்த நபர் கடந்த 12ஆம் திகதி கொக்கைத் தடிமூலம் தேங்காய் பிடுங்கியுள்ளார். இதன்போது, தேங்காய் ஒன்று அவருடைய தலையில் வீழ்ந்துள்ளது. அவர் யாழ்ப்பாணம் மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்ட நிலையில், நேற்றுக் காலை மேலதிக சிகிச்சைகளின்போது உயிரிழந்தார்.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (அ-ம-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மதுபானப் பயன்பாட்டினால் நாளாந்தம் 50 பேர் பலி

**கொழும்பு,ஜன.17**

**இலங்கையில் மதுபானப் பயன்பாடு காரணமாக நாளொன்றுக்குச் சராசரியாக 50 பேர் உயிரிழக்கின்றனர் என்று மதுபானம் மற்றும் போதைப்பொருள் தகவல் மையம் தெரிவித்துள்ளது.**

இதுதொடர்பில் புகையிலை மற்றும் மதுபானங்கள் மீதான தேசிய அதிகாரசபையின் தலைவர் மருத்துவர் ஆனந்த ரத்நாயக்க தெரிவிக்கையில்,

இலங்கையில் மதுபானம் மற்றும் புகையிலைப் பயன்பாடு காரணமாக ஆண்டுதோறும் 15,000 முதல் 20,000 பேர் வரை உயிரிழக்கின்றனர். வீதி விபத்துகள் மற்றும் புற்று நோயால் ஏற்படும் மரணங்களை விடவும், மதுபானத்தால் ஏற்படும் மரணங்களே நாட்டில் அதிகமாக உள்ளன.

சட்டபூர்வமான மதுபானம் மற்றும் சட்டவிரோத மதுபானம் ஆகிய இரண்டுமே இத்தகைய உயிரிழப்புகளுக்குப் பிரதான காரணிகளாக இருக்கின்றன. பல நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் மக்கள் பிரதி நிதிகள் மதுபான உற்பத்தி அல்லது விற்பனை நிலையங்களின் உரிமங்களை வைத்துள்ளனர். அரசியல் பலத்தைத் தக்கவைக்க மதுபான நிறுவனங்களின் நிதியை அரசியல்வாதிகள் பயன்படுத்துகின்றனர். பதிலுக்கு, மதுபான நிறுவனங்களின் ஆதிக்கத்தை நிலைநாட்ட அரசியல்வாதிகள் துணை நிற்கின்றனர் - என்றார். (ச-இ)

**வேலையாட்கள் தேவை**

சாவகச்சேரியில் அமைந்துள்ள வியாபார நிறுவனம் ஒன்றிற்கு பொருட்களை விநியோகிப்பதற்கு மற்றும் களஞ்சியத்தில் நின்று வேலை செய்வதற்கு வேலையாட்கள் தேவை. சாவகச்சேரியில் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது. சம்பளம் நேரில் பேசித்தீர்மானிக்கப்படும்.

தொடர்பு: 077 398 0145

(CS 60475) E

**காணி விற்பனைக்கு உண்டு**

**யாழ்ப்பாணம் அரியாலை ஆனந்தம் வடலி வீதியில் (AV வீதி) 3ம் ஒழுங்கையில் 3 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.**

- 1 1/2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்.
- AV வீதி முகப்புடன்.
- யாழ்ப்பாண பஸ் நிலையம் 4km தூரம்.
- A-9 வீதியிலிருந்து 400 m தூரம்.
- ஒரு பரப்பின் விலை 60 இலட்சம் ரூபாய்.

தொடர்பு:- 076 860 2770
076 987 8617

(CS 31005) A

## விடைபெறும் ஜூலி; சஜித்துடன் சந்திப்பு

கொழும்பு,ஜன.17

இலங்கைக்கான தனது பதவிக்காலத்தை நிறைவுசெய்து அமெரிக்கா திரும்பத் தயாராகும் அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் நேற்றுக் கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் சஜித் பிரேமதாஸவைச் சந்தித்தார்.

ஜூலி சங் அமெரிக்கா திரும்புவதையொட்டி இந்தச் சந்திப்பு ஒரு விடைபெறும் நிகழ்வாக அமைந்தது. தனது பதவிக்காலத்தில் இலங்கைக்கு வழங்கிய ஆதரவு மற்றும் ஒத்துழைப்புக்காகத் தூதுவர் ஜூலி சங்குக்கு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நன்றி தெரிவித்தார். ஒரு தூதுவராக ஜூலி சங் இலங்கைக்கு ஆற்றிய சிறப்பான பங்களிப்புகள் என்றும் மறக்கமுடியாதவை என்று சஜித் பிரேமதாஸ இதன்போது குறிப்பிட்டார். (ச-இ)



வண்ணை சாந்தையர் மடம் கற்பக விநாயகர் ஆலயத்தில் தைத்திரு நாளன்று சிறப்புப் பூசை வழிபாடுகள் இடம்பெற்றறன. (க-17)

**காணி விற்பனைக்கு**

கோண்டாவில் கிழக்கு. Farm School க்கு அண்மையில் 2 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. (Singer Company முன்பாக)

077 60 111 35

**வீடு வாடகைக்குத் தேவை**

யாழ். நகரை அண்மித்ததாக வீடு வாடகைக்குத் தேவை.

தொடர்பு: 076 105 6333

**வேலையாட்கள் தேவை**

| | | |
|---|---|---|
| மேசன் | : 3500/= | உணவு, தங்குமிட வசதி வழங்கப்படும் |
| கூலி | : 2800/= | |
| பெயின்ரர் | : 3300/= | |

தொடர்புகளுக்கு:
072 303 9589

**வீடு வாடகைக்குத் தேவை**

3 பேரைக் கொண்ட சிறியகுடும்பம் ஒன்றிற்கு திருநெல்வேலி, மருதனார்மடம், மானிப்பாய், கொக்குவில், கோண்டாவில், உரும்பிராய் ஆகிய இடங்களில் வீடு வாடகைக்குத் தேவை.

(CS/60467) J-1

தொடர்புகளுக்கு:-
076 537 4879

**மணல் விற்பனை/ பொமிட் போட்டு தரப்படும்.**

கட்டிட வேலைகளுக்கு அரச அங்கீகாரம் பெற்ற பழுப்பு நிற பூச்சு மணல் விற்பனைக்கு உண்டு.
யாழ். மாவட்டத்திற்கு
65,000 இருந்து...
மற்றும் கனரக வாகனங்களுக்கு யாழ். மாவட்ட வீதி அனுமதிப்பத்திரம் போட்டு தரப்படும்.

(CS 31022) J-1

தொடர்புகளுக்கு:- 076 324 9977

**வேலையாள் தேவை**

கொக்குவில் தாவடியில் இயங்கிவரும் பிரபல்யமான நிறுவனம் ஒன்றுக்கு வேலையாட்கள் தேவை.

➤ பாரவூர்தி சாரதி

தொடர்புகளுக்கு:-
076 096 9728

**வேலையாள் தேவை**


நல்லூரில் அமைந்துள்ள (Work Shop) Car Painting (பெயின்ரிங்) and Servies)
வேலை தெரிந்தவர்கள், அனுபவமுள்ளவர்கள், பழக விரும்புபவர்கள் விரும்பத்தக்கது.

(CS/60470) J-1

தொடர்புகளுக்கு:-
077 004 5391

## மரண அறிவித்தல்

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 24 . 08 . 1958 | | 14 . 01 . 2026 |



**சிதம்பரப்பிள்ளை இராசமோகன்**

**(ரிங்கர் மோகன்)**

காளிகோவிலடி தாவடி தெற்கு கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சிதம்பரப்பிள்ளை இராசமோகன் அவர்கள் 14.01.2026 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிதம்பரப்பிள்ளை - கனகாம்பிகை தம்பதிகளின் இரண்டாவது மகனும், வசந்தாவின் பாசமிகு கணவரும், சுமதி, உசா, உசாமினி, நிமா, சங்கீதா ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை 18.01.2026 ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

(CR 60474) E

**காளி கோவிலடி,**
**தாவடி தெற்கு,**
**கொக்குவில்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்**
**077 582 1028**

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி: news@uthayan.com விளம்பரம்: advt@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 17.01.2026 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.